# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜூன் ௴ 27 ௳ [ந. 101

பிரஸங்கம் CI.

## ருஷ்யா வாரம்.

### ருஷ்யாவிற்கு வந்தனம்!

இந்த வாரத்தை ருஷ்யா வாரம் என்று வழங்குகிறோம். ருஷ்ய-ஜெர்மன் யுத்தகாரணமாக முன்பு ஜூன் மாதத்தில் ஆங்கிலேய-ருஷ்ய ஒற்றுமை அறிவிக்கப்பட்டது. இவ்வருஷம் ஜூன் 22-ம் தேதியோடு ஒரு வருஷம் ஆகிவிட்டது. இனி மறுபடியும் ருஷ்யாவில் ஜெர்மன் படையெடுப்பின் இரண்டாவது வருஷ ஆரம்பம் நேராதென்று நம்புவோம்.

### ஏராள எதிரிகள்.

சென்ற வருஷம் ஜூன் ௴ 22 ௳ தனக்கு உதவியாக இருக்கும் போதே ருஷ்யாவை ஜெர்மனி தாக்கிற்று. சிநேகிதர்களையும் எச்சரிக்கை கொடுக்காமல் தாக்குவதென்பது ஜெர்மனியின் வழக்கம்தான். ஆனால் தெய்வ ஸங்கல்பத்தின்படி ஜெர்மனிக்குத்தான் தோல்வி வந்துகொண்டிருக்கிறது. ருஷ்யாவைத் தாக்கியதால் ஜெர்மனிக்கு ஏராள எதிரிகள் குவிந்துவிட்டனர். 30 நாடுகள் ஜெர்மனிக்கு விரோதமாக இருக்கின்றன. அமெரிக்காவும் ஒரு எதிரி.

### மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை.

நாஸி மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை. மேலான ருஷ்யர்களின் பலத்திற்கும், ஆயுதங்களுக்கும் முன்னால் ஜெர்மன் தந்திரங்கள் பலிக்கவில்லை. ஜெர்மன் சைனியம் நிகரற்றது என்ற கதையெல்லாம் போய்விட்டது. லெனின்கிராட், மாஸ்கோ முதலிய நகரங்களுக்கு முன்னால் நாஸிகள் சென்றும் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது. தற்காப்புப் போர் செய்ய வேண்டியதாயிற்று. பனியில் அதிக அவஸ்தையும் ஏற்பட்டது. ஆயுத பலம், மனித பலம் எல்லா விதத்திலும் ருஷ்யர்களின் ஆதிக்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

### ஒரு புதிய தந்திரம்.

புதிய தந்திரத்தையும் ருஷ்யா கையாண்டது. அதாவது **'விஸ்தார யுத்தம்'** பின்வாங்குவது, தயக்கம் செய்வது, பிரதேசத்தை விட்டுக் கொடுத்தாலும் காலத்தைப் பிரதிக்ஷிப்பது, பூ தகன முறை, முதலியவைகளால் தங்களுக்கும் நேசநாடுகளுக்கும் பெரும் உதவியாக இருந்து வந்தனர். இந்த வருஷம் பூரா எதிரி சண்டையில் ஈடுபடும்படி செய்யப்பட்டான். அசந்தும் போனான். ஆனால் நேசநாடுகள் ஏராள சாமான்களை உற்பத்தி செய்துகொள்ள முடிந்தது.

### எதிரி ஒற்றுமை குலைந்தது.

ஜெர்மானியரின் ஒற்றுமையை ருஷ்யர்கள் முறித்துவிட்டனர். ருஷ்யப் போர்முனையில் காயமடைந்த ஜெர்மானியரை ஏற்றிக்கொண்டு ரயில் வண்டிகள் ஜெர்மனிக்கு வந்தன. ஆயிரக்கணக்கான பேர்கள் இறந்தும் போயினர். இவைகளைக் கண்டு ஜெர்மானியர் பயமடைந்திருக்கின்றனர்.

### ருஷ்யாவின் பலம்.

ருஷ்யா பலம் வாய்ந்த நாடு. அதன் ஜனத்தொகை 19,00,00,000. உலகத்தில் ஆறில் ஒரு பங்கு அதன் பிரதேசம் இருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு அடுத்த படியானது. மனித பலம், தண்ணீர் உதவி, நிலக்கரி, எண்ணெய், உணவு முதலியவை ஏராளமாகக் கிடைக்கும். படித்தவர்களும், வீரர்களும் இருக்கும் நாடு. உதாரணமாக டால்ஸ்டாய், டர்கெனியல், டாஸ்டோயல்ஸ்கி, கார்கி முதலியவர்களும், ஸ்டாலின், மாலடோவ், ஒரோஷிலவ், டிமோஷென்கோ போன்றவர்களும் இருக்கும் நாடு.

### ருஷ்ய வீரன்.

ருஷ்ய வீரர்கள் பெரும் சண்டைகளில் கியாதி பெற்றிருக்கின்றனர். முன்பு நெபோலியனைத் தோற்கடித்தனர். தற்சமயம் ஹிட்லரையும் அவ்விதமே விரட்டியடிக்கப் போகின்றனர். ஏற்கனவேயே துருக்கியருக்கும் ஜப்பானியருக்கும் ருஷ்ய வீரனுடைய பலம் நன்றாகத் தெரியும். டைம்ஸ் பத்திரிகை கூறும் விதமாக 'ருஷ்யவீரன் 25வருஷங்களுக்குமுன் சண்டை செய்த விதமாகவே தற்சமயமும் சண்டை செய்கிறான். ஆனால் அதிக சாதுர்யமும, அதிக முஸ்தீபும் அக்கரையும் பொருந்தியிருக்கிறான்.'

சமீபத்தில் பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் செய்துகொண்ட உடன்படிக்கைகளால் உலகத்தில் அதிக ஆயுத சக்திவாய்ந்த நாடுகளுடன் சேர்ந்திருக்கிறது. அந்நாடுகளும் உதவத் தயாராக இருக்கின்றன.

இம்மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து அச்சுநாடுகளின் தொந்தரவை அழித்து யுத்தத்திற்குப் பிற்பட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

ஆகவே ஜூன் 22உ ருஷ்ய தினமானாலும் உலகத்திற்கே ஒரு விசேஷ தினமாகவே யாவரும் கருதவேண்டும்.

அந்த தினத்தில் நாம் ருஷ்யாவை ஒரு தகுந்த நேச நாடாகக் கருதுகிறோம். அதன் ஒத்துழைப்பால் நாம் வெற்றிபெறுவோம். உலகத்தில் சமாதானமும் ஏற்படும். ஆகவே ஹிட்லர் ருஷ்யாவைப் படையெடுத்தது ஒரு விதத்தில் நேச நாடுகளுக்குச் சாதகம்தான். ஆகவே ஹிட்லரின் முடிவும் சீக்கிரம் ஏற்படும்.

இவ்வாரத்தில் ருஷ்யாவைப்பற்றி வெளிவந்த பிரிடிஷாரின் சில புகழ்ச்சி மொழிகளையும் அவைகளுக்கு ருஷ்யர்கள் அனுப்பிய செய்திகளையும் அச்சிடுகிறோம்.

---

# A.—பிரிடிஷாரின் சந்தோஷமொழிகள்.

## I

## மிஸ்டர் சர்ச்சில்.

(பிரதம மந்திரி).

"ருஷ்யா சண்டையிலீடுபட்டு இரண்டாவது வருஷம் ஆரம்பிக்கப்போகிறது. இன்னும் சில மாதங்களில் பிரிடன் யுத்தத்தில் ஈடுவட்டு நான்காவது வருஷம்

ஆரம்பமாகப் போகிறது. இந்த சந்தர்ப்பத்தில் கிரேட் பிரிடனின் பிரதம மந்திரியான நான் ருஷ்யர்களின் தலைவர்களுக்கு எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். சென்ற வருஷத்தில் உங்களுடைய யந்திரப் படைகளும் கொரில்லாப் படைகளும், பொதுஜனங்களும் தேசத் தற்காப்பிற்காக அதிகம் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் முயற்சிகள் இனி பயன்படுமென்றே நம்பியிருக்கிறேன்.

"நமது இருநாடுகளும், மற்றும் உதவிய நேசநாடுகளும், இவைகளுக்கு உதவியாக இருக்கும் அமெரிக்காவின் சாமான்களும் சேர்ந்து நமது எதிரிகளை நாம் அடக்க முடியும்"

## உதவியை கவனியுங்கள்.

"எங்களால் சாத்தியமான உதவியை நாங்கள் செய்வோம். ஏனென்றால் ஒருவித எச்சரிக்கையும் கொடுக்காமல் உங்கள் நாட்டை ஹிட்லர் படையெடுத்தான். அதனாலேயே நம் இருவருடைய சிநேகம் விருத்தியடைந்திருக்கிறது.

"பிரகிருத நிலைமைக்கு மட்டுமில்லாமல் யுத்தத்திற்குப் பின்னாடி உலக அமைப்பை முன்னிட்டும் நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஆகவே மாலடோவின் வருகைக்கு பிறகு ஏற்பட்ட உடன்படிக்கையை நாங்களும், ருஷ்யர்களும் விரும்பினார்கள்.

"எதிரிகளை மதிமயங்கச் செய்யவே நமக்குள் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்ததும் ஸ்வதந்திரத்தை விரும்பிய யாவருக்கும் சமாதானத்தை வழங்குவோம்."

## II

## மிஸ்ட்டர் C. R. அட்லி.

### (உதவி பிரதம மந்திரி).

"ருஷ்யாவுக்கு ஸப்ளை போய்க்கொண்டிருக்கிறது. அந்நாட்டுக்கு நாம் மேலும் உதவி புரிவோம். ருஷ்யர் ஜெர்மன் ஆயுதத்தை மழுக்கடித்திருக்கிறார்களேயன்றி அதை இன்னும் அழித்துவிடவில்லை. அவர்கள் தற்போது தற்காப்புப்போர் நடத்திவருகின்றனராயினும், நாளடைவில் முன்னேறித்தாக்கி எதிரிகளை முறியடிப்பது திண்ணம். மாலடோவ்வின் விஜயத்தால் இருநாட்டினருக்கும் அதிக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது."

## III

## ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்.

### (காமன்ஸ் சபை லீடர்).

"அமெரிக்காவின் தொழிற்சாலை உதவியும், ருஷ்யாவின் இயற்கைப் பொருள்களின் உதவியும் நமக்குப் பூராவாக ஏற்பட்டவுடன், ஐரோப்பாவின் மேற்கே வெற்றிகரமான தாக்குதலைச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

"நாம் நேசநாடுகளுக்கு வெற்றி தரும்படியான உதவியைச் செய்தால் தான் சாதகமாக இருக்கும். இல்லாவிட்டால் நமது திட்டங்களே பயன்படா. அப்படி ஓர் போர்முனையை ஏற்படுத்திவிட்டால், மிகவும் தீவிரமாகச் சண்டை செய்து பெர்லினையும் பிளந்து செல்லுவோம். அது எப்போது சாத்தியமென்பதை இப்போது சொல்லமுடியாது. ஹிட்லர் எதிர்பார்த்திருக்கும்படி சீக்கிரத்திலேயே இருந்தாலும் இருக்கலாம்.

"நாம் நமது ஏற்பாடுகளைத் தயாரித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அவனும் தயாரித்துக்கொண்டுதானிருப்பான். இவ்விஷயம் ருஷ்ய அயல்நாட்டு மந்திரியான மாலடோவ் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது அவருடன் சர்ச்சை செய்யப்பட்டது. அவருக்கு இது நன்றாகவே தெரியும்.

"உலகமும், இந்த இருநாடுகளும் முக்கியமாக மாலடோவ், மெயிஸ்கி, சர்ச்சில், ஈடன் இந்த நான்கு பேர்களுக்கும் அதிகம் கடமைப்பட்டிருக்கின்றன.

"இந்த இருநாடுகளுக்கும் ஏறபட்டிருக்கும் ஒப்பந்தத்தை, யுத்தத்திற்குப் பிறகு உலக அமைப்பிற்காகப் போடப்பட்ட அஸ்திவாரக் கல்லென்றே யாவரும் சொல்லுவார்கள்.

"அப்படி ஏற்படப்போகும் சமாதானத்திற்கு முன்பாக நிச்சயம் வெற்றி கிட்டவேண்டும். அந்த வெற்றியை அடைவதென்றால், நாம் குறையாத ஊக்கத்துடனும், தைரியத்துடனும் இருக்கவேண்டும். மத்திய காலத்தில் ஏற்படக்கூடிய தோல்விகளைக் கவனிக்கக்கூடாது."

## அதிக நம்பிக்கை.

"ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததைவிட நாம் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறோம். இருந்தாலும் நமது சத்துருக்கள் வசமுள்ள பலத்தைப்பற்றி நாம் குறைவாக மதித்துவிடக்கூடாது. நம்மால் பூராவாகத் தோற்கடிக்கப்படுமுன் அதிகக் கடுமையாகவும், தீர்மானத்துடனும் எதிரிகள் சண்டை செய்து பார்ப்பார்கள். அவர்களுடைய ராணுவ பலத்தையும், தொழிற்சாலைகளின் அமைப்பையும் அடக்குவதற்கு நமக்கு இன்னும் கொஞ்சம் நாள் தேவையாக இருக்கலாம்.

"பிரிடிஷ் படைகளும், ருஷ்யப் படைகளும் வெவ்வேறு பாகங்களில் இருந்து சண்டை செய்யலாம். ஆனால் ஆபிரிக்காவில் பிரிடிஷ் படைகளுக்கு எவ்வித தைரியம் இருக்கிறதோ அதேவிதமாக கார்கவ், ஸெபாஸ்டோபூல் முதலிய இடங்களிலுள்ள ருஷ்யப்படைகளுக்குமிருக்கிறது.

"இந்த நாட்டில் நமக்கு சிநேகிதர்களாக இருக்கும் சிலரைவிட ருஷ்யர்களே நமது முயற்சியையும், வெகுநாளாக சண்டை செய்வதால் நமது கப்பற்படைக்கும், வியாபாரிகளுக்கும், விமானப்படைக்கும், உலகத்தின் பல பாகங்களில் பிரிந்து சண்டை செய்யும் சிப்பாய்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சிரமத்தையும் உணர்கிறார்கள். அதைப்போல் நாமும் வெற்றியை முன்னிட்டுப் பாடுபடும் ருஷ்யர்களின் தியாகத்தையும் உணர்கிறோம்."

## நாஸிக்கொடுமை.

"ஆக்கிரமித்த நாடுகளில் நாஸிகளின் கோபம் அதிகரிக்க, அதிகரிக்க அங்குள்ள ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும், குழந்தைகளுக்கும்தான் கஷ்டம் அதிகரித்திருக்கிறது. இவ்விதம் செய்யும் கொடுமைகளுக்கு அவர்கள் ஒருநாள் அவஸ்தைப்படத்தான் வேண்டியிருக்கும். உலகத்தில் நாகரீகம் பரவவேண்டியதற்காகவே இவ்வித காட்டுமிருண்டிச் செய்கைகளை நாம் அடக்கவேண்டும்.

"யுத்த தந்திரத்தைத் தவிர ருஷ்யர்களும், பிரிடிஷார்களும் பரஸ்பரம் தெரிந்துகொள்ளவேண்டியது பல இருக்கின்றன. இவ்விரு நாடுகளின் ஒற்றுமையைக்கொண்டு யுத்தத்திற்குப் பிறகு உலக சீர்திருத்தத்தில் செய்யவேண்டியது பல உள்ளன.

"நம் இருநாடுகளும் வருங்காலத்திலும் ஒற்றுமையுடனேயே இருக்கும். ஐரோப்பாவிலிருந்து நாஸிக் கொடுமையை அகற்றவே முடிவான தீர்மானத்துடனும் நடந்துகொள்ளும்".

## IV

# ஸர் ஆர்ச்பால்டு ஸின்கிளேர்.

(விமான மந்திரி.)

"மிகப் பிரமாதமாகப் புகழடைந்திருக்கும் ருஷ்யர்களை நான் வணங்குகிறேன். வெற்றிவரை யுத்தத்தை நீடித்து நடத்தி பரஸ்பரம் நல்லெண்ணம், நம்பிக்கை முதலியவைகளைக்கொண்டு நாம் யுத்தத்திற்குப் பிறகு உலகத்தை அமைப்போம்."

V

## ஜெனரல் ஸர் ஆர்ச்பால்டு வேவல்.

(இந்திய தலைமை தளகர்த்தர்).

"ஜெர்மனி உங்கள் நாட்டைப் படையெடுத்த வருஷக்கொண்டாட்டம் இவ் வருஷத்தோடு முடிந்துவிடுமென்று நம்புகிறேன். தரை, கடல், விமானம் முதலியவைகளில் ஈடுபடும் உங்கள் வீரர்களுக்கு என்னுடையவும், இந்தியப்படைகளுடையவும் சந்தோஷத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

"ருஷ்யர்களின் தைரியத்தையும், பொறுமையையும் பார்த்து உலகத்தார் ஆச்சரியமடைகின்றனர். நாங்கள் உங்களுக்கு வெற்றிவரவேண்டுமென்று விரும்புகிறோம்.

"30 வருஷகாலமாகப் பழகிவந்த ருஷ்ய மக்களுக்கு எனது சொந்த நற் செய்தியையும் கொடுக்க விரும்புகிறேன்".

VI

## டாக்டர் டெம்பிள்.

(காண்டர்பரி ஆர்ச்பிஷப்.)

"இந்த இருநாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கையுடனும், கௌரவத்துடனும் சேர்ந்திருந்து வெற்றியடையும் வரை சண்டைசெய்து, தர்மமான மார்க்கத்தையும் நல்லெண்ணத்தையும் ஆதாரமாகக்கொண்டு உலகத்தில் சமாதானத்தை அமைக்கும்".

# B.—ருஷ்யாவின் பதில்.

I

## கலினின்.

"ருஷ்யர்கள் தற்சமயத்தில் வெற்றியில் பூரண நம்பிக்கையுடன் எதிரிகளை எதிர்த்து வருகின்றனர். இதற்குத் தேவையான ஆயுதங்களை நம் வசத்திலிருக்கின்றன. ஜெர்மானியர் ஆடம்பரமாகச் சொல்லிவந்த வசந்த காலத்தாக்குதல் பயன்படவில்லை. முழுப்போர் முனையிலும் அவர்களால் நிர்வகிக்க முடியவில்லை. முன்னேற்றப் போரை நாம் அவர்களிடமிருந்து பிடுங்கிவிட்டோம்".

II

## ஸ்டாலின்.

ஸ்வதந்திரத்தை முன்னிட்டு புரியப்படும் இந்த யுத்தத்தில் நாம் தனியாக இல்லை. ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், ஹிட்லர் ஏஜெண்டுகளுக்கு உட்பட்டிருக்கும் மக்களும்நமது பக்கத்திலிருக்கின்றனர். உலகத்தின் ஸ்வதந்திரத்திற்காகவே நாம் போரிடுகிறோம். ஹிட்லரின் சைனியங்களை எதிர்த்து எல்லா மக்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இந்தக் கருத்தைத்தான் மிஸ்டர் சர்ச்சில் வெளிப்படுத்தி ருஷ்யாவிற்கு உதவுவதாய்ச் சொன்னார். நமக்கு உதவியளிக்கப்படுமென்று அமெரிக்க அரசாங்கத்தினரும் சொன்னார்கள்".

III

## மார்ஷல் டிமொஷன்கோ.

"நமது சிநேகிதர்களான பிரிடிஷ் மக்களை நான் அன்புடன் வரவேற்கிறேன். வெற்றிகிட்டும்வரை ருஷ்யர்கள் ஜெர்மானியருடன் எதிர்த்து நிர்பார்கள். ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகளுக்கு வெற்றி கிடைக்கவேண்டும்."

# வார யுத்தச் செய்திகள்.

## 20—6—42-லிருந்து 26—6—42-வரை.

**லிபியா.**—டொப்ருக் விழுந்தவரையில் நேர்ந்த சம்பவங்களின் விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. மே மாதத்தில் எதிரித்தாக்குதல் நேருமென்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக நமது 8-ம் படை கஸாலா, பிர்ஹாகீமிற்கு இடையில் எதிரியைத் தடுக்க ஏற்பாடு செய்தது. ஒரு வாரத்திற்கு முன்னமேயே பிரிடிஷ் விமானப்படை குறுக்கு எதிர்ப்புகளை ஆரம்பித்தது. நைட்ஸ்பிரிட்ஜ் எல் ஏடம் பிரதேசத்தில் கடும் சண்டை நடந்தது. அந்த சமயத்தில் எதிரி நேசதேச சுரங்க தளங்களின் வழியாகப் பிளந்துகொண்டு வந்துவிட்டான். இருந்தாலும் அவன் ஸப்ளைகளைப் பெறமுடியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் இரு கக்ஷியினரும் களைத்துப்போயினர்.

ஜூன் மீ 3உ சுரங்கதளங்களின் முன்னால் எதிரி நிலைத்தான். ஜூன் மீ 4உ ஜெனரல் ரிச்சி அவனைக் குறுக்கு எதிர்ப்புச்செய்து விரட்டியடித்தான். இதனால் பிர்ஹாகீமை ஜூன் 10உ காலிசெய்ய நேர்ந்தது. மறுபடி உதவிபெற்று ரோமல் நைட்ஸ்பிரிட்ஜ்—எல் ஏடம் பிரதேசத்தைப் பிளந்து கடற்கரையை நோக்கி ஓடினான். நான்கு நாள் தரை, விமானம் இவைகளில் கடும் சண்டை நடந்தது. ஜூன் மீ 7உ எல் ஏடம்—எல் டோ—எல் ரெஸெக் பிரதேசத்திலிருந்து ரிச்சி பின்வாங்கினான். டொப்ருக்கில் மாத்திரம் ஒருபடை இருந்தது. ஜூன் மீ 20உ டொப்ருக்கினுள் எதிரி பலத்துடன் தென்கிழக்கு வழியாக முன்னேறினான். அதிக ஸ்தூகா விமானங்கள் தாக்கியதால் டொப்ருக் விழுந்தது. அங்கிருந்த விமான எதிர்ப்பு பீரங்கிகளும் கெட்டுவிட்டன.

இந்த சந்தர்ப்பத்தை ரோமல் லெகுவாகப் பயன்படுத்திக்கொண்டான். பார்டியாவைக் காலிசெய்ததும் கபுஸோ, ஸிடி ஓமார், ஷெபர்ஸான், மடல்லனு கோட்டை இவைகளை நோக்கி படைகளையும் அனுப்பினான்.

பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் கஸாலா, பெங்காஸி, டிமிமி, முதலியவைகளைப் படையெடுத்தன. டொப்ருக்-கபுஸோ பாதையை தென் ஆபிரிக்க விமானப்படை தாக்கியது.

டொப்ருக் விழுந்ததும், மால்டாமீது எதிரி நடமாட்டம் அதிகமாக இருக்கிறது.

எகிப்து சண்டை ஆரம்பமாயிற்று. காம்பூத், ஸொல்லம், ஸிடி ஓமார் காலி செய்யப்பட்டன. எதிரி ஸிடிபரானியை நோக்கிப் போகிறான். நேசதேசப் படைகள் எதிர்க்கத் தயாராக இருக்கின்றன.

ஸிடிபிரானி, மர்ஸா மாட்ரூ இவைகளின் இடையில் எட்டாம் படை எதிரிகளுடன் சண்டை செய்கிறது.

**ருஷ்யா.**—ஸெபாஸ்டோபூலைத் தாக்கிய ஜெர்மன் படைகள் கோட்டைக்குள் சில இடங்களில் புகுந்தன. அங்கிருப்பவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள எதிரிகளுடன் பலமாக சண்டை செய்கின்றனர்.

கார்கவ்வில் மறுபடி சண்டை ஆரம்பமாயிருக்கிறது. ஓரிடத்தில் ருஷ்யர்களை விரட்டியதாகவும் சொல்லப்படுகிறது. கார்கவ்வின் கிழக்கே குபியான்ஸ்கை ஜெர்மானியர் பிடித்துள்ளனர்.

ஸ்மொலென்ஸ்கில் ருஷ்யத் துருப்புகள் மறுபடி சண்டையை ஆரம்பித்திருக்கின்றன. பிரயான்ஸ்கில் ருஷ்ய டாங்கிகள் ஓரிடத்தைப் பிடித்துள்ளன. விமானச் சண்டையில் மர்மான்ஸ்கில் 24 ஜெர்மன் விமானங்கள் நாசமாயின. பாரன்ட்ஸ் கடலில் 15,000 டன்னுள்ள எதிரிக்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

சைன.—கடைசியாக சுங்கிங்கிலிருந்து கிடைத்த செய்திகளிலிருந்து கின்ஹுவாவிற்குக் கிழக்கே ஜப்பானியர் சில இடங்களை இழந்தனர். கியாங்ஸி மாகாணத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச்செய்து வருகின்றனர். செகியாங்-கியாங்ஸி இருப்புப்பாதை வழியாக நான்கு ஜப்பானியப் படைகள் முன்னேறுகின்றர். இருந்தாலும் 100 கிலோமீடர் தூரமிருக்கிறது. ஹாங்ஜாவோ, கின்கியில் எதிரி பலம் செய்துவருகிறன். குவிய்கியை சீனர்கள் திரும்பப் பிடித்துள்ளனர். கியாங்ஸி-செகியாங ரயில்வேயை நோக்கி ஜப்பானியர் அதுவரைதான் முன்னேறியிருக்கின்றனர்.

இதற்குள்ளாக தென்சைனுவில் குவான்டங் போர்முனையில் கான்டன்-ஹாங்கவ் இருப்புப்பாதையை நோக்கி முன்னேறும் எதிரிப்படைகள் நிறுத்தப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—எம்டன், பிரெமன், ஹாலந்து, வடக்கு பிரான்ஸ் முக்கியமான லக்ஷியமாக இருந்தன. பர்மாவில் அக்யாப், கலிவா, ஹோமலின், மாக்வி, மிய்டிகியின முதலியவை தாக்கப்பட்டன.

**பஸிபிக்.**—ரபால், லேயி இரண்டும் ஆஸ்திரேலிய விமானங்களால் தாக்கப்பட்டன. 10,000 டன் நிறையுள்ள ஜப்பானியக் கப்பல் ரபாலுக்கு அருகில் மூழ்கடிக்கப்பட்டது.

அலூஷியன் தீவுகளில் கிஸ்காவை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டனர்.

**பலவகைப்பட்டவை.**—1. ஜனபதியுடன் பேச்சு வார்த்தை செய்ய மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டன் சென்றிருக்கிறர். கப்பல்கள் ஸப்ளைகள் சம்பந்தமான பிரச்னைகளும், இரண்டாவது போர்முனையைப் பற்றியும் பேசுவதாகத் தெரிகிறது. அமெரிக்க மந்திரிகளுடனும் பார்லிமெண்டு சபையினருடனும் ஜூன் மீ 25உ பேசினர்.

2. ஒரு நீர்மூழ்கியால் லாங்கு வார் தீவின் கிழக்கு முனை தாக்கப்பட்டது. சில இடங்களில் அதிர்ச்சியால் ஜன்னல்கள் சேதமாயின.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | இதாலி (Italy)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்.— டாரெண்டோ (Taranto). | | | |
| **11—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | எதிரி வண்டிகளின் கூட்டங்கள், பீரங்கி ஸ்தானங்கள், ஏராளமான மோட்டார்கள்.- | | 3 விமானங்கள். | |
| | பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**11—6—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**இதாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்).

கப்பற்படை தளம்—டாரெண்டோ (Taranto). — 2 நாசகாரிகள் மூழ்கடிக்கப் பட்டன.

**கிரீஸ் (Greece)**—(பிரிடிஷ் விமானங்களால்).

பிரேயஸ் (Piraeus).

**12—6—42.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—விரோதிக் கப்பல்கள் டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி கவசம்பூண்ட வண்டிகள், போக்குவரத்து வண்டிகள்.—பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில்.

துறைமுகம்.—பெங்காஸி (Benghazi).

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்)

விமான நிலயங்கள்.—ராபால் (Rabaul), காஸ்மாடா (Gasmata).

**13—6—42.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—கியாஸ் சேமித்து வைக்கும் இடங்கள் (Gasholders) தொழிற்சாலைகள், விரோதி போக்குவரத்துகள்.—வடபிரான்ஸ் (France).

சாமான் ஏற்றும் ரயில் வண்டி, என்ஜின் ஈடபிள்ஸ் (Etaples).

சாமான் ஏற்றும் ரயில் வண்டி—டியப் (Dieppe).

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

விமான எதிர்ப்புகள்.-ஸிரெனைகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில்.

நாஸிகளின் கவசம் பூண்ட வண்டிகள், போக்குவரத்து வண்டிகள்—பீர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **14—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | | |
| மூன்று கப்பல்கள் கொண்ட துணைக் கப்பல் கூட்டம்.—டென்ஹெல்டரு (Denhelder)க்கு மேற்கே. | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டது. | | |
| விரோதி விமான நிலயங்கள், மற்ற லக்ஷியங்கள்.-ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | நஷ்டமில்லை. | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| விரோதி மோட்டார்கள், டாங்கிகள்—ஆக்ரோமாவுக் (Acroma)கருகாமையில். | | | |
| விமானமிறங்குமிடத்திலிருக்கும் விமானங்கள்—டெர்ணு (Derna). | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கிரீட்டி(Crete)லுள்ள விமான நிலயங்கள். | | | |
| **இதாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பற் படை தளம்—டாரெண்டோ (Taranto). | | 4 விமானங்கள். | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை எங்கும். | | | |
| **தூரக்கிழக்கு–ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| அத்தீவிலுள்ள விரோதிக்குச் சொந்தமான ராணுவக் கட்டடங்கள். | | | |
| **15—6—42.** (திங்கட்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதித் துருப்புகளின் கூட்டங்கள்—எலாடம் (Eladem) பிரதேசத்தில். | | | |
| விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், மோட்டார்கள்—பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | | | |
| விமான நிலயம்—பெர்கா (Berka). | | | |
| **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயங்கள்-காஸ்டாலி (Kastali). | | | |
| ஹேராக்லியான் (Heraklion), டிம்பாகி (Tymbaki) | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 15—6—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—கொயபாங் (Koepang) சுற்றிலுமுள்ள பிரதேசம். | | | |
| 16—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள் ரூர் (Ruhr) ரைன்லாந்து (Rhineland). | | | |
| | சுரங்கவேடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | 8 விமானங்கள். | 1 விமானம். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான தரைப் படைகள்.—எலாடம் (Eladem) பிரதேசம். | | | |
| | விமான நிலயங்கள்—பெர்க்கா (Berka), டெர்னு (Derna). | | 8 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—லே (Lae), ஸலாமாவா (Salamavua). | | | |
| 17—6—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் தரைப் படைகளுக்கு உதவும் விமானப்படை.—எலாடம் (Eladem) பிரதேசம். | | | |
| | விரோதி விமானமிறங்கும் இடங்கள்—எல்கஸாலா (El Gazala), டிமிமி (Tmimi). | தீக்களும், வெடிகளும் கிளம்பின. | 4 விமானங்கள். | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—ஹெராக்கிளியான் (Heraklion), காஸ்ட்லி (Kastli). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—லே (Lae). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி யெடுப்புகளால் விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**18—6—42.** (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—லக்ஷியங்கள்—எம்டன் (Emden), ஆஸ்னுப்ரக்(Osnabruck) வடமேற்கு ஜெர்மனி (Germany) யில் ஏதோ ஒரு இடம்.

விரோதிக்குச் சொந்தமான விமான தளங்கள்—ஹாலந்து (Holland), ஆஸ்லோ (Oslo).

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).

விமானமிறங்குமிடம்—கஸாலா (Gazala).

விமான நிலயம்—டிமிமி (Tmimi).

கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்கள்).

விமான நிலயங்கள்—ஹெராக்கிளியான் (Heraklion), டிம்பாக்கி (Tymbaki).

ருஷ்யா (Russia)—(ருஷ்யா விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு–நியூ பிரிடன்(New Britain)–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயம், கப்பல்கள்.—ராபால் (Rabaul). — அநேக விமானங்கள் நாசமாக்கப்பட்டன,

தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

வேவு பார்த்தல்.–லே (Lae) பிரதேசத்தில்.

**19—6—42.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில்.

விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries).

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகம்.—பெங்காஸி (Benghazi).

ரோட்ஸ் (Rhodes)—(பிரிடிஷ் விமானங்களால்).

மாரிட்ஸா (Maritza).

கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்).

ஹெராக்ளியான் (Heraklion).

தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயம்.—லே (Lae).

தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—ராபால் (Rabaul).

தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

கலேவா (Kalewa).— சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில்.

விமான நிலயம்.—மிட்கியினு (Mitikyina).

# விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—6—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **13—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **14—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் Britain**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—இங்கிலாந்து (England) தெற்குக் கடற்கரையில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 1 விமானம். | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |
| **15—6—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 15 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—மெர்ஸா—மாட்ரூ (Mersa-Matrub), பூஹூகா (Fuka) பிரதேசங்களில். | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம் | ... சிலர் கொல்லப்பட்டனர்; சொற்பச் சேதம். | 4 விமானங்கள். | 1 விமானம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—எலாடம் (Eladem) பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **17—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிடி ரெஸிக் (Sidi Rezegh) பிரதேசம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| **18—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிரெனேகா (Cyrenaica)விலுள்ள யுத்தரங்கத்தில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| **19—6—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் விமான நிலயங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களி லிருந்து குண்டு கள் போடுவதி ஞல் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**20—6—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானஙகளால்).

இரவில்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக் கடற்கரை.

**லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்).

டோப்ருக் (Tobruk).

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

டொப்ருக்கை ஒரு பரீக்ஷை சம்பவமாகவே கருதவேண்டும். அதாவது உண்மையான தைரியமும் ஒற்றுமையும் இருக்கிறதாவென்று தெரிந்துகொள்ள செய்யப்பட்ட ஒரு பரீக்ஷையாகும். வெற்றியடைந்துவிடலாமென்ற மனப் பான்மையை தைரியமென்று சொல்லமுடியாது. ஆனல் ஏற்படக்கூடிய பயன் களைச் சரிவரத் தெரிந்துகொண்டு அதற்கு அனுகுணமாக நாம் தைரியமாக இருக்கவேண்டும். அதாவது பலாபலன்களைத் தீர விசாரிக்கவேண்டும். விஷயங் களைப் பூராவாகப் பரிசீலனைசெய்து சிறு சம்பவங்கள் யாவையும் ஒன்றுசேர்த்து சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். கடைசியாகப் பார்க்கும்போது ஒற்றுமையென்பது திடீரென்று ஏற்படக்கூடியதல்ல. அதற்கு லாயக்காக தனது புத்தியை முன்னடியே அமைத்துக்கொள்ளவேண்டும்.

டொப்ருக் சம்பவம் ஒரு பாதகமான அம்சம்தான். சென்ற வருஷத்தில் 250 நாட்கள் எதிர்த்து நின்ற டொப்ருக் ஒரு நாளில் எதிரி வசமாயிற்று. அதனல் மத்தியக் கிழக்கில் நேசநாடுகளின் திட்டம் மாறிவிட்டது. ஏரான மனிதர்களும் சாமான்களும் நஷ்டம். நேசதேசங்களின் ஒரு முக்கிய தளம் எதிரி வசமானதால் எகிப்து எல்லைக்கு அவன் எளிதில் வரமுடியும்.

இது எதிரி வசமானதற்கு உண்டான காரணங்கள் நமக்குத் தெரியும். எதிரி அதிக ஆட்களையும், பீரங்கிகளையும், கவச மோட்டார்களையும் உபயோகித்தான். ஆயுதங்களால்தான் எதிரி வெற்றிபெற்ருன். இருந்தாலும் நேசநாடுகள் பிரமாத மாகச் சண்டைசெய்தன. இந்தியர்களுக்கும் அதில் பங்கு உண்டு. மேலும் போக்குவரவு சாதனங்கள் வெகு தூரமாக இருந்தன. கப்பல்கள் போதுமான படி இல்லை. கிடைத்த ஸப்ளைகளில் சில ருஷ்யா, ஆஸ்திரேலியா, இந்தியா முதலியவைகளுக்கு அனுப்பப்பட்டன.

ஆனல் டைம்ஸ் பத்திரிகை கூறும்விதமாக ஒரு சண்டையில் தோல்வி வந்ததே தவிர யுத்தமே போய்விடவில்லை. எப்போதும் பாலைவனச் சண்டை இப்படித் தானிருக்கும். திடீரென்று அகண்ட பிரதேசங்கள் ஒரு கைவிட்டு மற்ருெரு கைக்கு மாறிவிடும். முதலில் வேவல் லிபியாவில் முன்னேற்றப்போரை துவக்கிய போது ஸிரனைகா பூராவும் அவர் வசத்திலிருந்தது. உடனே டொப்ருக்கின் பேரில் படையெடுப்பு செய்யப்பட்டது. ஆனல் கிரீட் யுத்தத்தை முன்னிட்டு கொஞ்சம் பின்வாங்க நேர்ந்தது. அடுத்த தடவை ஆச்சின்லக் முன்னேற்றப் போரைச் செய்தபோது லிபியாவை நோக்கி எதிரி மறுமுறை விரட்டப்பட்டான்.

எல் அகெய்லா வரை ஓடினுன். பிறகு ரோமல் வெகு பாடுபட்டு பாதி பிரதேசத்தைதான் கைப்பற்றமுடிந்தது. பாலைவனச் சண்டைகளில் பிரதேச நஷ்டத்தைவிட எதிரிகளுக்கு உண்டாகியிருக்கும் சாமான்களின் நஷ்டம்தான் அதிகம் கவனிக்கத்தகுந்தது. மேலும் மேலுதவி வருவதையும் பொருத்திருக்கிறது. மறுபடி நமக்கு உதவிகிடைத்தால் நேசதேசங்களின் நிலைமை சாதகமாக முடியலாம். பிரகிருதத்தில் ரோமல் தனது லக்ஷியங்களுக்கு எவ்வளவோ தூரத்திலிருக்கிருன். அவை அலெக்ஸாண்டிரியாவும், கெய்ரோவும்தான்.

தற்போது பிரிடிஷ் படைகள் ரோமலை எகிப்திலுள் செல்லும் ரஸ்தாவிலேயே தடுத்து உட்செல்லவிடாமல் செய்யவேண்டும். 'இது நிச்சயம் செய்ய முடியும். நிச்சயம் செய்யவும்படும்.'

வி வி வி வி வி வி வி

**முடிவான வருஷம்.** அமெரிக்காவிற்கு மிஸ்ட்டர் சர்ச்சில் திடீரென்று சென்று 'அவசரத் தீர்மானங்களை' முடிக்கப்போகிருர். இதிலிருந்து இவ்வருஷத்தில் யுத்தத்தில் சில முடிவான மாறுதல்கள் நேரலாமென்று தோன்றுகிறது. ரோமல் லிபியாவில் முன்னேறியதையும், கிரிமியா, கார்கவ்வில் ஜெர்மானியர் முன்னேறியதையும் சைனுவில் ஜப்பானியர் பலமடைவதையும் பார்த்து இம்மாதிரி அவசரத் தீர்மானத்திற்கு வந்திருக்கிருர். அச்சு நாடுகள் களைத்திருக்கின்றன. ஜெர்மனி தோற்ருல் தனக்கும் தோல்வி ஏற்படுமென்று ஜப்பானுக்குத் தெரியும். ஜப்பான் அலூஷியன் தீவில் முன்னேறியதைப் பார்த்தால் ருஷ்யாவைப் பின்புறமாகத் தாக்க இருக்கலாம். அப்படி இருந்தால் ருஷ்யாவிற்கு நேசநாடுகளின் உதவி அதிகமாகச் செய்யப்படவேண்டும். ருஷ்ய-பிரிடிஷ் ஒப்பந்தமும் 1942-ல் முடிவான சம்பவங்கள் நேரலாமென்று தோன்றுகிறது. நேசநாடுகள் தங்களுடைய முழுபலத்தையும் சேகரித்து முடிவாக சண்டை செய்வார்கள்.

**ஸெபாஸ்டோபூல்** டொப்ருக்கைப்போல் காகஸஸில் இருந்துவருகிறது. இவ்வருஷம் எதிரி தாக்குதல் கோடைகாலம் வந்துவிட்டதால் மிக மும்மரமாக இருக்கிறது. மூன்று வாரங்கள் வரை எதிர்த்துநின்று மீண்டும் சமாளித்துவருகிறது. சாதாரண கோட்டையானதால் உதவி சென்ருல்தான் இன்னும் நிர்வகிக்கமுடியும். இதில் எதிரிக்கு ஏராள நஷ்டம் ஏற்படும். ஆனுல் தனது ஆட்களை பலி கொடுப்பதற்கு ஜெர்மனி பின் வாங்காது.

வி வி வி வி வி வி வி

**அலூஷியன் தீவுகள்.** இதில் ஜப்பானியர் இரண்டு தீவுகளைப் பிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிரிடனுக்குச் சமமான ரேகையில் இருந்தால் இவைகள் மிகக் குளிரும் மூடுபனியுடனும் இருக்கும். சீதோஷ்ண நிலைமை சரியாக இல்லாததால்தான் அமெரிக்கர்கள் ஜப்பானியரைத் தடுக்கமுடியாமல் போய்விட்டது. இருந்தாலும் ஜப்பானியருக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் மிக அதிகம். ஒரு க்ரூயிஸரும் பல சண்டைக் கப்பல்களும் நஷ்டம். அலூஷியன் தீவுகள் மிக முக்கியமானவை. அவைகளின் அமைப்பு மிக வளசலாக இருப்பதால் டோகியோவிற்கும் ஸான்பிரான்ஸிஸ்கோவிற்கும் சமீபத்தில் இருக்கின்றன. கிஸ்கா என்பது ராட் தீவு கூட்டத்திலுள்ளது. இது காமாசட்கா மாகாணத்திலுள்ள ருஷ்ய நகரமான பெட்ரோபளோவ்ஸ்க்கிற்கு 800 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்நகரம் ஜப்பானியர் வசமானதால் அமெரிக்காவிற்கும், ஆசியா, ருஷ்யாவிற்கும் ஆபத்துத்தான். நேசதேசங்கள் வசமிருந்தால் ஜப்பானுக்கு அதிக ஆபத்து.

வி வி வி வி வி வி வி

**சைனு.** இங்கு ஜப்பானியரின் நடமாட்டத்தை சாதாரணமாக நினைக்கக்கூடாது. கடல் மார்க்கங்கள் சாவதானமாக இல்லாததாலும், கப்பல் நஷ்டம் அதிகமாவதாலும், ஜப்பான் தனது ஸப்ளைகளை அனுப்ப தரை மார்க்கத்தைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது. இதற்குமுன் நடந்த செகியாங், கிவாங்ஸி, குவான்டங்

சண்டைகளெல்லாம் ஹுங்சல்—நான்கிங், ஹாங்கல்—கான்டன் இருப்புப்பாதைகளைக் கைப்பற்றி மஞ்சூரியாவிலிருந்து சிங்கப்பூர் வரை இந்தோ-சைனு வழியாக தரை மார்க்கத்தை ஸ்தாபிக்கும் நோக்கமிருப்பதாகத் தெரிகிறது.

இந்த நோக்கம் சீனர்களுக்கும் தெரியுமாதலால் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரிகளை எதிர்த்தடிக்கின்றன. செகியாங்கிலுள்ள சாங்ஷாவைப் பிடித்ததிலிருந்தே சீனர்களின் கொரில்லாப் படைகளின் தீரம் தெரிகிறது. கின்ஹவானைச் சுற்றியுள்ள முக்கிய நிலங்களெல்லாம் திரும்பப் பிடிக்கப்பட்டன. கியாங்ஸியை நோக்கி செய்யப்படும் எதிரித் தாக்குதல் திருப்பியடிக்கப்பட்டன. மொத்தத்தில் இங்கே சண்டை சாதாரணமாகத்தானிருக்கிறது.

சைனு சண்டையில் அலுத்து பயந்துவிட்டதென்றும் நேசதேசங்களின் உதவி போய்ச்சேரவில்லையென்றும் எதிரிகள் சொல்லிவருகின்றன. சமீபத்தில் ஜெனரல் சயாங்-கை-ஷெக் பின்வருமாறு சொல்லியுள்ளார்: 'நான் ராணுவத்தை ஆரம்பித்தபோது 2,000 பேர்தானிருந்தனர். தற்சமயம் 30,00,000 பேர்களிருக்கின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து இவைகளின் சிநேகமும் இருக்கிறது.'

ஸர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் 'ஆசியா சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க சைனுவைத்தான் முக்கியமாகக் கருதுகிறேம். இதற்கு இந்தியாவும் சைனுவும் ஒன்றுசேரவேண்டும். நெபோலியன் சொன்னவிதமாக சைனியத்தின் பலத்தில் தைரியம் முக்கால் பங்கு, மனிதர்களும், ஆயுதங்களும் கால் பங்கு என்ருல் சீனர்களின் எதிர்ப்பு மிக மும்மரமாக இருக்கும்' என்று சொல்லியுள்ளார்.

வி வி வி வி வி வி வி

**பொய் சொல்லுவதில் திறமை.** அச்சுநாட்டுப் புழுகுகள் மிக மும்மரமாகவே இருந்துவருகின்றன. அதிலும் ஜப்பானிய கப்பற்படையைப்பற்றி ஏராளமாகப் பேசுவதில் மிக மும்மரம். பேர்ல் துறைமுகச் சம்பவத்திற்குப் பிற்பட்டு பஸிபிக்கில் அமெரிக்கா ஆதிக்கத்தை இழந்ததென்றும், பவளக்கடல் சண்டைக்குப் பிறகு அதன் நிலைமை கேவலமாகி சுமார் 6 பெரிய கப்பல்களை மாத்திரம் வைத்துக்கொண்டு தனது நாட்டையே காக்கமுடியாத நிலையிருக்கிறதென்றும் சொல்லுகின்றனர். ஜுன் மீ 8உ 'அமெரிக்கப் பாதுகாப்புப்படை அழியும் தருவாயிலிருந்ததாயும் சொல்லுகின்றனர். ஆனல் ஜுன் மீ 12உ மிட்வே தீவு சண்டையில் ஜப்பானியருக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. 'மிட்வே தாக்குதலால் அமெரிக்கக் கப்பற்படை ஏமாற்றமடைந்து அதன் முன்னேற்றப்போர் தடைபட்டது' என்றும் அவர்கள் சொல்லுகின்றனர். ஜுன் மீ 8உ அமெரிக்கக் கப்பற்படை அழிந்திருந்தால் ஜுன் மீ 12உ அது எவ்விதம் முன்னேற்றப்போரை துவக்கமுடியும்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியக் கப்பற்படையின் நிலைமை.** அமெரிக்கக் கப்பற்படை, கிடைத்த சந்தர்ப்பங்களில் சில சண்டைகளைச் செய்திருக்கின்றது. சென்ற ஆறு மாதங்களில் ஜப்பானியக் கப்பற்படை 8-ல் ஒரு பங்கு அழிக்கப்பட்டது. அதாவது 51 சண்டைக் கப்பல்களாகும். மூன்றில் ஒரு பங்கு சேதமாக்கப்பட்டது. ஆக மொத்தத்தில் 45 சதவிகிதமாகிறது. சண்டையிலீடுபடாத போக்குவரத்து முதலிய கப்பல்களில் 74 மூழ்கடிக்கப்பட்டன. 48 சேதமாயிருக்கின்றன, விமானமேற்றும் 10 கப்பல்களும், 35 க்ரூயிஸர்களும் நஷ்டமானதுதான். அதிகமாக பாதிப்பதாக ஜப்பானியர் கருதுகின்றனர். நிலைமை இவ்வாறு இருக்க அமெரிக்கக் கப்பற்படை அழிந்துவிட்டதென்று தைரியமாக ஜப்பானியர் சொல்லுகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்க விமான பலம்.** கடலில் ஆபத்து அதிகமிருப்பதைக் கவனித்து அமெரிக்க விமானங்களை அதிகம் கட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது. சண்டைகளும், முற்றுகைகளும் ஆங்காங்கு பிரமாதமாக நடந்துகொண்டிருக்கும்போது அமெரிக்க சாமான்களின் உற்பத்தியில்

ஊக்கத்துடன் ஈடுபட்டிருக்கும் விஷயம் மிக ஆச்சரியமானது. சண்டை நடக்கும் எல்லா அரங்கங்களிலும் அமெரிக்க விமானங்கள் பிரசன்னமாக இருக்கின்றன—சைனு, பர்மா, இந்தியா, லிபியா, ஆஸ்திரேலியா, ஜெர்மன் பிரதேசங்கள், அட்லாண்டிக், பஸிபிக், மத்தியதரைக்கடல், கருங்கடல் எங்குமிருக்கின்றன. மீண்டும் அமெரிக்க விமானங்கள் உற்பத்தி செய்யப்படுவதைப்பார்த்தால் பெரும் வகையான போர் சீக்கிரத்திலேயே நிகழும் என்று சொல்லலாம். சண்டைக் கப்பல் கட்டுவதையும் நிறுத்திவிட்டு விமானங்களேற்றும் கப்பல்கள் கட்டப்படுகின்றன. டாங்கிகளை எதிர்க்கவும் விமானங்களே உபயோகிக்கப்படும். டோகியோவைத் தாக்கியதால்தான் ஜப்பானியர் வங்காளக்குடாக்கடலிலிருந்து ஓடினர்.

வி வி வி வி வி வி வி

**“நாஸிகள் அடக்கு முறையை விசித்திரமாகச் செய்கின்றனர்.** சம உரிமைக்கக்ஷிக்கு விரோதமானவைகளும் இதர கொடிய ஏற்பாடுகளும்” மிக அதிகமாக இருக்கின்றன. வீயன்னுவில் கூட்டம் கூட்டமாகப் பொதுஜனங்கள் கைதி செய்யப்படுகின்றனர். குற்றவாளிகளின் ஜாபிதா தயாரிக்கப்படுகின்றன. இப்படி கைதி செய்யப்பட்டவர்கள் தொழிலாளிகளின் கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர். ரகசியப் போலீஸ் பள்ளிக்கூடங்களில் அடைக்கப்படுகின்றனர். சரியானபடி அதிகாரத்தை செலுத்தாமல் தயவு காட்டியதற்காக 800 மாஜிஸ்திரேட்டுகள் பதவியிழந்தனர். சம உரிமை கக்ஷிக்கு விரோதமாக இருப்பவர்களை அடக்க ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

வி வி வி வி வி வி வி

**இதாலியின் இரண்டாம் வருஷ தினம்.** இதாலி யுத்தத்திலீடுபட்டு ஜூன் 10உ இரண்டாவது வருஷ தினம். இந்த சந்தர்ப்பத்தில் கௌபர் கவியின் மொழிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. ‘ரோம் அழிந்துவிடும், இம்மொழிகளை ரோமர்கள் சிந்திய ரத்தில் எழுதி குற்றம் செய்தவர்களைப் போல் ரோமர்கள் அழிக்கப்படுகின்றனர். வெறுக்கப்படுகின்றனர்.’

கார்ஸிகா, ஸாவாய், நைஸ், டூனிஸ், எகிப்து, ஸூடன், கெனியா, முதலியவைகளை நரிமாதிரி நடந்துகொண்டு பிடித்துவிடலாமென்று இதாலி நினைத்தது.

ஆனல் இதாலி அடைந்ததென்ன வென்பதை கவனிப்போம்.

1. அபிஸீனிய சாம்ராஜ்யம் நஷ்டமாயிற்று. 2,00,000 பேர்களும் இறந்தனர்,
2. லிபியாவும், 3,00,000 பேர்களும் நஷ்டம்,
3. டாரன்டோ, மடபன் சம்பவங்களில் அவமானமடைந்தது,
4. அல்பானியா, கிரீஸ் இங்கே கேவலமான நிலை ஏற்பட்டது,
5. க்ரோஷியாவில் இதாலிய ராஜ்யத்தின் தலைவனுன ஸ்பாலிடோ மறுபடி அங்கேபோக முடியவில்லை,
6. டால்மாடியாவிலிருந்து துரத்தப்பட்டது,
7. ஜெர்மன் ரகசியப் போலீஸ் இதாலியில் ஆதிக்கம் அடைந்திருக்கின்றனர்,
8. இதாலிய தொழிலாளிகள் ஜெர்மனியில் உழைக்க வேண்டியிருக்கிறது,
9. முஸோலினி பதவியிழந்து,
10. ரோமின் கௌரவமே போய் விட்டது.

**ஜப்பானிய ஆக்கிரமணம்.** உண்மையில் ஜப்பானிய ஆக்கிரமணம் என்னவென்பதையும் கவனிப்போம்.

முதலாவதாக ஆக்கிரமித்த நாடுகளின் சொத்துக்களை பறிமுதல் செய்வது. ஷாங்காயை ஆக்கிரமித்துக்கொண்டதும் அங்கிருந்த ஒவ்வொரு வியாபாரத்தையும் பிடிங்கிக்கொண்டனர். தொழிற்சாலைகளிலிருந்து ஒன்றையும் எடுத்துப்போகாமல் பாதுகாப்பதாகச் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக யாவற்றையும் பறிமுதல் செய்துவிடுகின்றனர்.

அடுத்தபடியாக ஆங்காங்கு உள்ளவர்கள் விரட்டப்படுகின்றனர். இதனால் கைகலந்த சண்டை நேருகிறது. ஜனங்களுக்கு வீடு வாசல்களை விட மனசு வரவில்லை.

மூன்றாவதாக கத்திமுனை ஆட்சிதான் செய்யப்படுகிறது. ஹாங்கவ்வில் ஒரு ஸ்தாபனவிடுதிக்குப் பந்தோபஸ்துக் கொடுப்பதாகச் சொல்லி பிறகு அவன் பல 1,000 டாலர் செலவு செய்து விருத்தி செய்ததும் அதைப் பறிமுதல் செய்து விட்டனர்.

நான்காவதாகக் கைதி செய்வது. ஐந்தாவதாக விபசாரம். ஹாங்கவ்வில் ஒரு கடையை வியாபித்துக்கொண்டு அதை விபசாரச் சாலையாக மாற்றினார்கள்.

ஆறாவதாக கூட்டு வியாபாரம், ஏழாவது கொள்ளையடிப்பது ஸ்விடவ்வில் கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் கூட்டுச் சேர்ந்து 50 சதவிகிதம் லாபத்தைக் கொடுக்கும்படி சொல்லுகின்றனர். பீபிங்கிலுள்ள செழிப்பான நிலங்களைக் கொள்ளையடித்து குடியானவர்கள் ரிக்ஷா வண்டிகளை இழுக்கும்படி செய்யப் பட்டனர்.

எட்டாவது ஆக்கிரமணம், 1938-லிருந்து 1941-வரை 83,873 குடும்பங்கள் வடகிழக்கு மாகாணங்களிலிருந்து விரட்டப்பட்டனர். அது சுமார் 2,47,173 ஏக்கரா விஸ்தீரணமாகிறது.

கடைசியாக கொலை. ஜப்பானிய ஆக்கிரமணத்தை எதிர்த்த சீனர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் நிலம் பிடுங்கப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**மதமென்ற செட்டை.** பிரதேச ஆக்கிரமணம், அரசியல் ஆதிக்கம் முதலியவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமான காரணங்களைக்கொண்டு ஜப்பானியர் ஆதிக்கமடைய விரும்புகின்றனர். அதாவது பயிற்சி, மதம் முதலியவைகளைப் பறிக்கவும் ஆசைப்படுகின்றனர். தனது மதத்தை இழந்து ஷின்டோ கொள்கையைப் பின்பற்றிவரும் ஜப்பான் மதாசாரியரின் ஸ்தானத்தை வகிக்க விரும்புவது விசித்திரமாக இருக்கிறது. ஜூன் 10வ டானகா யோஷியோ ஒலிபரப்பும்போது ஜப்பானின் பொதுக்ஷேமம் முதலியவைகளைப் பற்றிச் சொன்னான் :—

**பிலிப்பைன்ஸ்.** 'பிலிப்பைன்ஸ் வாசிகள் மேலெழுந்தவாரியான நோக்கமுள்ளவர்கள். அதிக ஆடம்பரமாக அலங்காரம் செய்துகொண்டு தைரியமுள்ளவர்களைப்போல வெளியில் காணப்படுவார்கள். ஆனால் அவர்கள் வீடுவாசல்கள் அதிக ஆபாசமாக இருக்கும். சோம்பல் பிடித்து, புத்தியில்லாமல், அமெரிக்கர்களைப்போல் கெட்டுவிட்டனர்.'

இதற்குப் பரிகாரம் என்ன ?

'பிலிப்பைன்ஸ் வாசிகள் அதிக செலவாளிகள். பணம் கிடைத்ததும் அவர்களுடைய தகப்பன்மார்கள் உயிருடன் இருக்கும்போதே விலையுயர்ந்த ஜதையைத் தயாரிக்கின்றனர். இந்த வழக்கம் ஜப்பானியருடையது. பிலிப்பைன்ஸ் பிதிரு பக்தியை நாம் பின்பற்றினால் கௌரவ மக்களாவோம்.'

**தாய்லாந்து.** 'ஜப்பானிய புத்தமதத்திற்கும், தாய்லாந்து புத்தமதத்திற்கும் அதிக ஒற்றுமை இருக்கிறது. அவர்களுடைய மதாசாரியர்களுக்கு ஜனங்களிடையே அதிக செல்வாக்கு இருக்கிறது. ஜனங்களும் அவர்களைப் பக்தியுடன் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஜப்பானியரான நாம் அவர்களை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டால் தாய்லாந்தை வசப்படுத்துவதில் சிரமமே இருக்காது.'

**பர்மா.** 'மதாசாரியர்கள் ஜப்பானிய சாமான்களை வாங்கச்சொன்னால் ஜனங்கள் வாங்கிக் கொள்ளுகின்றன.

'பர்மாவில் ஏராள கோவில்கள் இருக்கின்றன. பர்மிய ஆசாரியர்களை நாம் வசப்படுத்தினால் நமக்கு வெகு சௌகரியமாகிவிடும்.'

**இந்தியா.** 'பர்மாவில் ஏற்பட்ட மதமாறுதல் இந்தியாவை பாதிக்கும். இந்தியாவில் மதப்பற்றுதல் மிக அதிகம். இந்தியர்களின் மத லக்ஷியங்கள் இன்னும் கைகூடவில்லை. தங்களுக்கு உதவியளிப்போரை எதிர்பார்த்துக்கொண்டேதானிருக்கின்றனர். நாம் தாய்லாந்து, பர்மாவைப்போல் இந்தியாவையும் வசப்படுத்தலாம்.'

வி வி வி வி வி வி வி

**மிச்சம்பிடிப்பது.** இச்சஞ்சிகையில் இந்தியாவில் மிச்சம்பிடிக்க வேண்டிய அவசியத்தையும், பிரிடன் மிச்சம் பிடித்துவரும் விதத்தையும்பற்றி இரண்டு விஷயங்கள் அச்சிடப்பட்டு உள்ளன. பல தந்திரங்களடங்கிய இந்த யுத்தத்தில், பொருள் சம்பந்தமான தந்திரம் மிக முக்கியமானது. சிறு விஷயங்களை மிச்சம்பிடிப்பது அதிக சாதகமாக இருக்கிறது. தேசீய மிச்சம்பிடிக்கும் சங்கமென்பது பிரிடிஷாரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தாங்களாகவே இதில் யாவரும் சேர்ந்திருக்கின்றனர். இவர்களுக்குச் சம்பளம் கிடையாது. ஜனநாயகக்கொள்கையுடன் இருக்கிறார்கள். பொக்கிஷ மந்திரி ஸர் கிங்ஸ்லி சொல்லும்விதமாக இச்சங்கத்தில் ஒருவன் மெம்பராக சேர்ந்தால் வெற்றியைமுன்னிட்டு மிச்சம்பிடிக்கும் ஜனங்களுடன் சேர்ந்தவனாக ஆவான். தெருவில் மிச்சம் பிடிக்கும்படி சொல்லிவரும் கோஷ்டியும் முக்கியமானது. முதல் சங்கம் 1940-ல் ஆரம்பிக்கப்பட்டது. 10,000 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. 40-லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கின்றனர். நமது தேசீய யுத்த முன்னணியில் ஈடுபட்டிருப்போருக்கு இவ்விஷயம் முக்கியமானது.

---

## ஜெனரல் டோஜோவின் நகைப்பு.

(ரென்னிஸ்மித் எழுதியது.)

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள்மூலம் கிடைத்தது.)

இந்தியாவை வசப்படுத்தும் விஷயத்தில் ஜப்பான் மெபிஸ்டோபிலிஸ்ஸைப் போல் நடந்து கொள்ளுகிறது. இந்தியர்களைப்பற்றி ஜப்பானுக்கு விரோதமான எண்ணமே கிடையாதென்று ஜப்பானிய பிரதம மந்திரி டோஜோ சொன்னான். இந்த வசீகரமான வார்த்தைகளைச் சொல்லி 48-மணி நேரத்திற்கெல்லாம் சுபாஸ் சந்திரபோஸ் பெர்லின் வந்துவிட்டதாகவும் பிரிடிஷார் குலையும் தருவாயில் இருப்பதாயும் பெர்லின் ரேடியோவில் சொல்லப்பட்டது.

இந்த இரண்டு சம்பவங்களும் எதிர்ச்சையாக நடந்திருக்கலாம். அதை ஒருவரும் கவனிக்கவில்லையானாலும், ஜப்பானிய பிரதம மந்திரியின் பேச்சுத் திறமையைப்பற்றி கவனிக்க வேண்டியதுதான். ஜப்பானியரின் சிரிப்பு தனிப் பட்டது. அதை நம்பிவிடக்கூடாது. அவர்களைப்போல் ஏமாற்றச் சிரிப்பு வேறொருவரிடத்திலும் காணமுடியாது. அவ்வித கபடச் சிரிப்பை டோஜோ முகத்தில் காணலாம்.

### கபடமானவர்கள்.

அதிக அனுபவம்வாய்ந்த ஒரு ஐரோப்பிய நிபுணர் சொன்னது எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் சொன்னதாவது உலகிலுள்ளவர்களுக்குள் ஜப்பானியரைப்பற்றிதான் வியக்தமாக ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லையென்று சொன்னார். அதற்கு திருஷ்டாந்தமாக டோஜோவைச் சொல்லலாம். இந்தியர் களென்றால் ஏதோ விசேஷம் என்று மாத்திரம் சொல்லுவான். சீனர்களைப்பற்றி அப்படி சொல்லுவதில்லை.

இதே மாதிரிதான் ஜெர்மானியரும் ஐரோப்பா பூராச் சொல்லி ஏமாற்றினார் கள். 1938-ல் பிரிடிஷ், பிரெஞ்சு, பிரதம மந்திரிகளைப் பார்த்து 'உண்மையான பிறப்புள்ள' ஜெர்மானியர் ஜெர்மனிக்குள் வந்துவிட வேண்டுமென்று மியூனிச்சில் சொன்னான். செக்கர்கள், ஸ்லாவாகியர்களைப்பற்றி அதிகக் கவலை கிடையாது. அவர்களைத் தனியே ஸ்வதந்திரத்துடன் விட்டுவிடுவானாம்.

### ஹிட்லர் எவ்வாறு தனது வார்த்தையை நிறைவேற்றினான்.

முன்சொன்ன வார்த்தையைச்சொன்ன ஆறுமாதங்கள் கிரமித்து திடீரென்று பிரேக்கில் ஹிட்லர் புகுந்தான், டாக்டர் பெனிஸ் வெளியே சென்றான். 1939-ல் 18-நாள் சண்டையில் போலந்து விழுந்ததும் பிரெஞ்சு மக்கள் மிக சிநேகிதர் களென்று ஜெர்மானியர் சொல்லி பிரிடிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் விரோதத்தை உண்டுபண்ணினான்.

இதைப்போல் டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே முதலிய நாட்டு வாசிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஜெர்மானியரைக் காட்டிலும் நார்வேக் காரர்கள் ஒசத்தியாம்.

இந்தப் பிரசாரத்திற்கு பிறகு 9 வாரகாலத்தில் இவையாவும் ஜெர்மனி வசமாயின.

### "ஹீட்ரிச் அரசாங்கம்".

சீனர்கள் சொல்லும் விதமாக டோஜோ சிரிப்பு கபடமானதுதான். ஹீட்ரிச்சின் தன்மைகளெல்லாம் டோஜோவின் முகத்தில் காணப்படுகின்றன. செக்கோஸ்லாவகியாவிலுள்ளோருக்கு ஹீட்ரிச்சின் அரசாக்ஷி முறை நன்றாகத் தெரியும் லண்டனிலுள்ள செக்கோஸ்லாவாகிய அரசாங்கம் பின்வருமாறு ஒலிபரப்பியது. "குடும்பங்களையெல்லாம் ஜெர்மானியர் கொலை செய்தால் அது காட்டுமிருண்டித்தனம்தான். ஹீட்ரிச்சைக் கொலை செய்தது உலகத்தில் ஜெர்மனிகு உட்பட்ட நாடுகளின் சார்பாக செய்த பெரும் காரியமாகும்."

"கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை இந்தியத் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளுவார்களென்று ஜப்பான் எதிர்பார்க்கிறது" என்று டோஜோ சொன்னான். சந்தர்ப்பம் விசேஷம்தான. ஆனால் சொல்லுவது ஜப்பானல்லவா. சிரித்து ஏமாற்றும் இந்த மெபிஸ்டோபிலியின் தொழிலை கோயபெல்ஸ்கூட பின்பற்ற முடியாது.

---

## ஜப்பானியரின் கனவு.

**ஹூஸென் காகிட் யால்ஸின்** என்பவர் எழுதியது.

(இஸ்தான்புல்லிலுள்ள 11—5—42-ம் தேதி **'யேனி சபா'** பத்திரிகையிலிருந்து)

ஜப்பானில் கியோடோ சர்வகலாசாலையின் புரொபஸர் ஸூனேகிஷி கோமலி என்பவர் சமீபத்தில் முக்கியமான விஷயத்தை யாவருக்கும் திருப்தியளிக்கும்

விதமாக ஒலிபரப்பினர். இவ்வுலகத்திற்கு அவர் விடுத்த செய்தியில் கீழ்க்கண்ட சில விஷயங்கள் முக்கியமானவை :—

"அமெரிக்கா, கிழக்கு ஆசியாவே தவிர வேறல்ல. ஆஸ்திரேலியாவும்கூட ஆசியாகண்டத்தைச் சேர்ந்ததுதான். வட ஐரோப்பியர்களும் ஆசியாக்காரர்களைச் சேர்ந்தவர்கள்தான். முன்னொரு காலத்தில் ஆசியா கண்டத்திலுள்ள பல ஜாதியினர் உபயோகித்த அநேக ஆயுதங்கள் இப்பொழுது தெற்கு ஐரோப்பாவில் பல இடங்களில் தோண்டி எடுக்கப்படுகின்றன. மேற்சொல்லியவைகளால் ஐரோப்பா பூராவும் ஆசியா கண்டத்தைச் சேர்ந்த ஒரு பாகம் என்று சொல்லுவதற்குப் போதுமான முகாந்திரம் இருக்கிறது.

"பஸிபிக் மஹா சமுத்திரம், ஆசியாவுக்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. அத்தகைய பிரஸ்தாபம் புதிய சகாப்தத்துக்கு ஒரு புதிய கருத்தை விளக்குகிறது. இந்து மஹா சமுத்திரமும் ஆசியா கண்டத்திற்கே ஒதுக்கப்படவேண்டும். இவ்வுலகத்தில் ஏழு கடல்கள் இருக்கின்றன என்று சொல்லுவதெல்லாம் பிசகு. ஒரே ஒரு சமுத்திரம்தான் உண்டு. அதுவும் ஜப்பானுக்கேதான உரியது."

இவ்விஷயங்களை உலகத்தாருக்கு வெளியிட்டவுடன் அவர் கீழ்க்கண்ட விதமாக அவ்வியாசத்தை முடிவு செய்தார் :—

"இதாலியும், ஜெர்மனியும், ஆசியா கண்டத்திற்கு ஜப்பான்தான் மத்திய தேசமென்று ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஏனென்றால் ஜப்பானின் உதவியன்னியில் ஐரோப்பாவை புதிமாதிரியாக அமைப்பதற்கு அந்நாடுகளுக்குச் சக்தி போராது. மேல்நாட்டார்களின் நாகரீகத்திற்கு அடிப்படையாக ஆசியாதான் இருக்கிறது. ஆசியாவிலுள்ளவர்களைப் பார்த்துத்தான் மேல்நாட்டாரின் நாகரீகம் அபிவிருத்தியடைய வேண்டியிருக்கிறது."

இவ்வளவு பதவிசாகச் சொன்னதற்காக ஜப்பான் புரொபஸருக்கு நாம் வந்தனத்தைச் செலுத்துகிறோம். அவருடைய பகல் கனவில் பூலோகத்தில் இந்த எல்லைக்குள்மட்டில் ஏன் குறைத்துச் சொல்லிக்கொள்ளவேண்டும்? உலகத்திற்கே ஜப்பான் மத்திய தேசமென்று ஏன் அவர் சொல்லவில்லை? சூரியன், சந்திரன், ஆகாயம் இன்னும் மற்ற உலகங்களும் ஜப்பான் ஆதிக்கத்தின் கீழ்தான் வைத்திருக்கவேண்டுமென்று ஏன அவர் விரும்பவில்லை? இந்த விஷயம்தான் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது.

இத்தகைய பேச்சை ஜெர்மானியரும், இதாலியர்களும் எப்படி எண்ணுவார்கள்? தூரக்கிழக்கில் மஞ்சள் நிறமுள்ள ஜப்பானியரைவிட மேல்நாட்டில் கறுப்பு சட்டை தரித்திருக்கும் பாஸிஸ்டு கக்ஷியினருக்கு சாம்ராஜ்ய ஆசை அதிகம் கிடையாது. அப்படியே இருந்தாலும், அதை வெளிக்காட்டாமல் பதவிசாக இருந்தார்கள். அப்படியிருந்தும் ரோம் சாம்ராஜ்யத்தை புனருத்தாரணம் செய்ய அவர்கள் கொண்டிருக்கும் எண்ணம் இகழப்பட்டது. ஆனால் இப்பொழுது ஜப்பானிய சாம்ராஜ்ய ஆசையைப்பற்றி ஜப்பானிய புரொபஸர் சொல்லியிருப்பதைப்பார்த்தால், பெர்லினில் ஜப்பானைக் குறித்து அருவெறுப்பான நோக்கமும் பீதியும் ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஐரோப்பாவில் ஒரே ஒரு பெரிய ராணுவ வல்லரசுதான் இருக்க முடியும் என்று சொல்லிவரும் அச்சுநாடுகள், ஐரோப்பாவையும் சேர்த்து விழுங்க விருப்பங்கொண்டிருக்கும் தூரக்கிழக்கு வல்லரசு ஆதிக்கம் செலுத்த எப்படி சகிக்கும்.

முதன்முதலில் கிடைத்த வெற்றிகளினால் ஜப்பானுக்குண்டான மயக்கத்தில் ஜப்பானியர்கள் வழக்கத்துக்கு விரோதமாக அஜாக்ரதையாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். புத்தி கூர்மையுள்ளவரும் தீர்க்காலோசனை செய்யக்கூடியவரும், மிதவாதியுமாயிருக்கிற ஜப்பானிய புரொபஸரே உலகம் பூராவும் ஜப்பான் ஆதிக்கத்தின் கீழ்வைக்கவேண்டுமென்று ஆசைப்பட்டால், சாம்ராஜ்ய ஆசை கொண்டுள்ளவையும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் எதைத்தான் விரும்பமாட்டார்கள்.

'தோட்டம் நிலைப்பதற்குள் தென்னம்பிள்ளை வைக்க எண்ணுவதைப்போல' ஜப்பானியர்கள் நடத்தும் முதலாவது நடவடிக்கை அவர்களுடைய ஐரோப்பிய நேசதேசத்தார்கள் செய்துவரும் நடவடிக்கைகளைக் குலைக்கக்கூடியதாக இருக்கிறது. ஐரோப்பாவிலிருந்து ஜெர்மனியும், இதாலியும், ஜப்பானியர்களிடம் உதவியைக் கோருவதிலிருந்து ஜப்பானியர்களின் முக்கியத்வத்தைக் காட்டுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் வெளித்தோற்றத்துக்கு நிச்சந்தேகமாக ஜப்பானியர்கள் எண்ணுவதுபோல் காண்கிறது. சென்ற மூன்று வருஷங்களாக அச்சுநாடுகளின் ஐரோப்பிய கூட்டாளிகள் தங்கள் எல்லைக்குமேல் உபரியாக ஒரு அங்குலம்கூட அடைய முடியாமலிருந்தபோதிலும், ஐந்து மாதங்களுக்குள் கிழக்கு ஆசியா பூராவையும் ஜப்பான் வியாபித்துக்கொண்டுவிட்டது.

அநியாயமாய் அடைந்த ஜயத்தினால் வெறியுண்டாகி, அந்த வெறி மயக்கத்தால் அந்த ஜப்பானிய புரொபஸர் பேத்துகிறாரா? அல்லது ஜப்பானியர்கள் மானஸீமாகக் கொண்டிருக்கும் விருப்பப்படி சொல்லப்பட்ட வார்த்தைகளா? அல்லது ஜப்பானியர்களை ஏமாற்றி, உத்ஸாகப்படுத்தி இன்னும் மேற்கொண்டு பரித்தியாகங்கள் செய்யும்படி தூண்டப்பட்ட வார்த்தைகளா? எந்நிலைமையிலும் ஜப்பான் வெற்றியடைந்தால் உலகம் பூராவுக்கும் என்னவிதமான அபாயம் ஏற்படும் என்பதை அவர் வார்த்தைகளிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

நாடுகளைக் கைப்பற்ற ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் அபரிவிதமான விருப்பத்திற்கு ஒரு முடிவுகட்டி, இனிமேல் மனிதவர்க்கத்திற்கு அபாயம் உண்டாக்க ஜப்பான் பயமுறுத்தாமலிருக்கும்படி செய்யவேண்டியது அவசியமென்பதை அதன் நடவடிக்கைகளே ரூபித்துவிட்டன. ஐரோப்பாவில் சண்டை செய்யும் நாடுகளுக்குள் ராஜியாக சமாதானம் ஏற்படுத்த முடியுமானால் நிச்சந்தேகமாக ஜப்பானியர்களால் ஏற்படக்கூடிய அபாயம் அச்சமாதானத்தைத் துரிதப்படுத்தியிருக்கும். ஏனென்றால் ஐரோப்பாவின் பலம் குன்றி வரும்பொழுது, தூரக்கிழக்கில் ஐரோப்பாவை விழுங்க பெரிய பாம்பு படமெடுத்து வருகிறது என்று ஐரோப்பாவே அறிந்துகொண்டிருக்கிறது.

சரித்திர விசேஷமான காலத்தில் நாம் இருந்துவருகிறோம். யுத்தம் முடியும் காலம்வரை உயிருடனிருந்து பார்க்கக்கூடியவர்கள், அநேக விநோதமான சம்பவங்களைப் பார்க்க நேரிடும்.

இம்மாதிரி உலகம் பூராவும் கேவலமடையக்கூடிய நிலைமை இதற்குமுன் சரித்திரத்தில் ஏற்பட்டதில்லை. ஒரு விஷயத்தில் ஜப்பானிய புரொபஸர் சொன்னது உண்மையே. இனிமேல் உலகத்தில் கண்டங்கள் தனித்தனியாக இருக்கப்போவதில்லை. கடல்களும் வெவ்வேறு பேர்களுக்குச் சொந்தமென்பதில்லை. ஆனால் எல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டது. எல்லா அங்கங்களும் உறுதியாகவும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் சேர்ந்திருக்கின்றன. மனித வர்க்கம் நிலைத்து நிற்கவேண்டுமானால் ஜப்பானியர் கொடி பறக்குமிடத்தில் அம்மாதிரி இருக்கமுடியாது. ஆனால் ஸ்வதந்திரமும், நியாயமும் எங்கும் தங்கும்படி செய்தால்தான் மனித வர்க்கம் நிலைத்திருக்கலாம்.

---

## தங்க முட்டையிட்ட வாத்து.

**டெயிலி டெலகிராப்பில் *W. E.* ஹார்டு எழுதியது.**

**(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது).**

பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் நகரங்களைத் தாக்கியதின் வெளிப் பலன்களைக் காட்டிலும் உள்ளடங்கிய பலன்கள் அதிகம் இருக்கின்றன. பிரிடிஷ் விமானப் படையைத் தடுக்க (R. L. B.) ஜெர்மன் விமானப்படைக்குச் சக்தி

போரவில்லை. R. L. B. படை 1933-ல் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததும் அமைக்கப்பட்டது. அதிலுள்ளவர்களுக்கு ஸ்வஸ்திகா அடையாளங்களுடன் உடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பம் முதல் விமான மந்திரி கோயரிங் இதை விஸ்தாரப்படுத்துவதற்கு அதிக அக்கரை எடுத்துக்கொண்டான். உதவி ஜெனரல் ரீக்ஸ் என்பவன் தலைவனாக இருந்தான். ரீக்ஸுக்கு மாதச் சம்பளம் 5,000 மார்க். மோட்டார் முதலிய சௌகரியங்கள் இவனுக்கு உண்டு. இதர உத்தியோகஸ்தர்களும் இவனுக்கு உட்பட்டிருந்தனர்.

### கோடிக்கணக்கான மெம்பர்கள்.

மெம்பர்களுக்கும் குறைவே கிடையாது. கோடிக்கணக்கில் இருந்தனர். வருஷத்திற்கு 12 மார்க்ஸ் வீதம் பணம் கட்டினால் இதரவிதமான நிர்ப்பந்தம் அவர்களுக்குக் கிடையாது. SA., SS. அமைப்புகளில் அவர்கள் வேலைபார்க்க வேண்டியதுமில்லை. சீக்கிரத்தில் 1,00,00,000 பேர்கள் சேர்ந்தனர்.

R. L. B. தனியே அமைந்ததும் அதற்கு 12,00,00,000 மார்க்ஸ் வரும்படி கிடைத்தது. இப்படி சேர்ந்தவர்களிடமிருந்து சமயத்திற்கேற்றவாரெல்லாம் பணம் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

"R. L. B." என்று நீல வர்ணத்தில் எழுதப்பட்டும், ஸ்வஸ்திகா அடையாளமுள்ள வெள்ளி மெடல்களை ஒவ்வொருவனும் விலைக்கு வாங்கவேண்டும். இதனால் 2,00,00,000 மார்க்ஸ் அதிகம் கிடைத்தது. ஒவ்வொரு வார்டனும் தனது வீட்டின் முன் பதித்துவைக்க ஒரு தகடுத் துண்டையும் வாங்கவேண்டும். மெடல்களைவிட இதனால் அதிகப் பணம் கிடைத்தது.

### படையெடுப்புகளை அதிகம் கவனிக்கவில்லை.

இவர்கள் தேசம் பூரா சுற்றுப் பிரயாணம் செய்து, எரிகுண்டுகள் முதலியவைகளைப் பற்றி பிரசாரம் செய்து வந்தனர். ஏ. ஆர். பி. பயிற்சிகளும் செய்யப்பட்டன. எல்லாம் கொஞ்சச் செலவில்தான் செய்யப்படும். சொற்ப சாமான்கள்தான் ஸப்ளை செய்யப்பட்டன. பாதுகாப்பு ஸ்தலங்கள் கட்டப்படவில்லை. R. L. B. யிலுள்ளவர்கள் எதிரி படையெடுப்பு நேருமென்று எதிர்பார்க்கவில்லை.

R. L. B. இயக்கத்தைக்கொண்டு பணம் சம்பாதிக்கவே கோயரிங் நினைத்து வருகிறான். இதைப்போல் இதர ஏற்பாடுகளையும் செய்துவருகிறான். சுவாஸக் கருவிகளை வாங்கவேண்டுமென்று யாவரும் நிர்பந்திக்கப்பட்டு 5 மார்க்ஸ் வசூல் செய்யப்பட்டது. ஆனால் கருவி யாவருக்கும் கொடுக்கப்படுவதில்லை. ஆர் டிரேகர் (Auer and Draeger) கம்பெனியில் தயாரிக்கப்படும் இக்கருவி சரியாக இல்லையென்று யாவரும் சொல்லிவந்தனர். நல்ல மாதிரியை வாங்கவேண்டுமானால் வேறு 50 மார்க்ஸ் பணம் உபரியாகக்கொடுக்கவேண்டும்.

### கோயரிங் வார்த்தை நினைக்கப்படுகிறது.

ஜெர்மனி பேரில் படையெடுப்புகள் ஆரம்பமானதும் தாத்காலிகமான சில போலி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உண்மையான வேலையிலீடுபட போதுமான சாமான்களும் மனிதர்களும் கிடைக்கவில்லை. பெரும்வகையான விமானத் தாக்குதல் நேர்ந்ததும், விமானத்தாக்குதல் நேராது என்று கோயரிங் சொன்னது யாவருக்கும் நினைப்புக்கு வந்தது.

நெருப்பு அணைக்கும் கோஷ்டி புதிதாக அமைக்கப்பட்டது. போலீஸ்காரர்களைப்போலவும் இவர்கள் நடந்து கொள்ளுவார்கள். சிப்பாய்கள் இவர்

களுக்கு வந்தனம் அளிக்கவேண்டும். நெருப்பு அணைக்கும் கருவிகள் சரியான வைகளாக இல்லை. செக்கோஸ்லாவியாவிலிருந்து வந்தவைகளெல்லாம் மேற்கு பாகங்களுக்கு அனுப்பப்பட்டன. பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல் காலங்களில் 200மைல் தூரத்திலிருந்தாலும் நெருப்பணைக்கும் போலீஸ் கோஷ்டியினர் அழைக்கப்படுகின்றனர். அதிலிருந்து உள்நாட்டுப் படை பிரயோஜனமில்லை என்று தெரிகிறது.

R. L. B-க்கு ஹிம்லர் தலைவனானன். அதோடு அதற்கு இருந்த கௌரவம் குலைந்தது. அதுவரை அந்த இயக்கத்தை தங்க முட்டையிடும் வாத்தைப்போல் கௌரவமாகவே நினைத்துவந்தனர்.

பொதுஜனங்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்காகவே R.L.B. ஏற்பட்டது. ஆனால் ஹிம்லர் வந்ததும் அவனது கொடிய முறைகளால் தங்க முட்டைகளை அதிகம் அடையலாமென்று நினைத்து வாத்தைக் கொன்றதைப்போல் ஆயிற்று.

---

## இகழ்வான சம்பவங்கள் நிறைந்த வாரம்.

---

சம்பவங்கள் நிறைந்த வாரங்களில் ஜூன்ஸ்ரீ 6-ம்தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் கடல் யுத்தத்தில் ஆகாயத்திலும், கடலிலும், கடலுக்கடியிலும் ஜப்பானுக்கு ஏராளமான சண்டைகள் நேரிட்டதென்று டெய்லி டெலிகிராப் பத்திரிகை தலையங்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அலாஸ்காவிலிருந்து ஜப்பான் வரையிலுமுள்ள தீவு வரிசைகளில் விமானத்தாக்குதல்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தந்த தாக்குதல்களில் பஸிபிக் சமுத்திரத்தில் மத்திய ஸ்தாபனமான மிட்வே தீவிலும், தாக்குதல் செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. இத்தகைய தீரச்செயல்களுக்காக ஏராளமாக விமானப் படைப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. துருப்பேற்றிச்செல்லும் கப்பல்களையும், ஸப்ளைக் கப்பல் கூட்டங்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் ஆஸ்திரேலியாவுக்கு அப்பால் நடமாடச்செய்ததும், ஸிட்னி துறைமுகத்திற்குள் சிறிய நீர்மூழ்கிகளைத் தாக்கச் செய்ததும் ஜப்பானின்பெரிய சூழ்ச்சிகளில் ஒன்று. அவர்களின் சூழ்ச்சிகள் அநேக ஆயிர மைல்களுக்கப்பால் திட்டம் செய்யப்பட்டிருந்தன. இம்மாதிரி நீர்மூழ்கிகளை அனுப்பியதைத்தான் டியோகோஸுயஸ் பகுதிக்கு விசேஷ நீர்மூழ்கிகள் அனுப்பியதாக ஜப்பானில் சொல்லப்படுகிறது.

ஆசைக்கோரளவில்லை. நடந்ததோ கொஞ்சம். ஆஸ்திரேலியாவிலுள்ள நேசதேசப்பாதுகாப்புப்படை ஜப்பானின் கப்பல் கூட்டங்களைத் துண்டித்துவிட்டது. அரை டஜன் நீர்மூழ்கிகளை அழித்துவிட்டது. டியோகோ ஸுயரஸ் பகுதியில் விசேஷ நீர்மூழ்கிகள் வந்து சேர்ந்ததைப் பார்த்தால் மடகாஸ்கரை அச்சு நாடுகளின் தளமாகச் செய்ய ஜப்பான் ஏற்பாடு செய்தது தெரியவரும். அந்த நீர்மூழ்கிகள் ஸப்ளைக் கப்பலிலிருந்து வந்தாலும் அல்லது தனிப்படைப் பகுதியாக வந்தாலும் பிரிடிஷார் மடகாஸ்கரில் இறங்குவதற்குமுன் அவை ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அவைகள் வந்துசேருவதற்கு தாமதமாகாமல் போயிருந்தால் அதிகச் சேதம் விளைவித்திருக்கும். இந்த ஒரு தடவையில்தான் ஜப்பானின் யுத்தப்போக்கில் காலதாமதமும், காலப்பிற்பாடும் ஏற்பட்டுவிட்டது.

மிட்வே தீவு திட்டத்திலும், ஏதோ பிசகு நேர்ந்துவிட்டது. சென்ற டிஸம்பர் மாதத்தில் கூவம், வேக் முதலிய எல்லைப்புறத் தீவுகள் ஜப்பானியர்

வசமான பிறகு இந்தச் சிறிய மிட்வே தீவானது ஜப்பானியரை எதிர்த்து வந்தது. இப்பொழுது ஆகாய விமானங்கள் தூக்கிச் செல்லும் கப்பல்களும், யுத்தக்கப்பல்களும், க்ரூயிஸர்களும் உதவியாகக் கொண்டு சண்டைசெய்த பெரிய ஜப்பானியப் படை பலத்தையும் மிட்வே தீவுப்படை தோற்கடித்துவிட்டது. ஜப்பானியர்களுக்கு நேர்ந்த விமான நஷ்டங்களும், படைப்பகுதிகளின் சேதமும் இன்னும் மதிப்பிடக் கூடவில்லை. இருந்தபோதிலும் தங்கள் துறைமுகங்களிலிருந்து 2,000 மைல்களுக்கப்பாலிருக்கும் மிட்வே தீவைக் கைப்பற்றிக் கொண்டு அங்கு தங்கள் கப்பல்களைக் கொண்டுவர எண்ணியே ஜப்பானியர்கள் இந்தப் போரை அவசியமாகக் கருதி சண்டை செய்தார்கள். மிட்வே தீவானது ஆகாய விமான தளம்தான். கப்பற்படை தளமில்லை.

ஆனாலும் அமெரிக்கர்கள் அதை உபயோகிக்காமல் ஜப்பானியர்கள் கைப்பற்றிவிட்டால் அட்மிரல் நிமிட்ஸன் கப்பற்படை பலம் குன்றிவிடும். ஜப்பானிய அரசாங்க ஸ்தாபனமும் பஸிபிக் பிராந்தத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸின் பலம் அதிகரித்து வருவதைப் பரிசோதிக்க விரும்பினார்கள். அமெரிக்க பலத்தை நாலா பக்கமும் சிதறடிக்கவும் விரும்பினார்கள். அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரம் தாக்குவதாக பயமுறுத்தினார்கள். கடல் மார்க்கம் ஜப்பானியர்களுக்கு உண்டாகும் வசதியை நம்பியேயிருக்கும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் கொள்கை என்னவென்றால், ஆபிரிக்காவிலிருந்து, ஆஸ்திரேலியா வரையிலும் சமுத்திரத்தில் நேரிட்டு அதிகரித்துவரும் இக்கட்டுகளைத் தடுத்தும், அதுபோல் பவளக் கடலிலிருந்து பேரிங் கடல்வரையிலுமுள்ள சமுத்திரத்திலும் இடையூறுகளைக் குறைத்தும், ஜப்பானியர்களுக்கு எதிராக அதிக பலம் ஓரிடத்தில் திரட்டப்படாமல் இருக்கும்படி செய்யவேண்டியதேயாகும்.

---

# பிரிடன் பொருளாதாரப் பிரச்னைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளுகிறது.

(நார்மல் கிராம்ப் என்பவர் எழுதியது.)

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலமாகக் கிடைத்தது.)

பிரிடிஷ் கவர்ன்மெண்டின் வரவு செலவு தட்டம் சரியாக இருக்கிறதா அல்லது மோசமாக இருக்கிறதா என்று என்னை சிலர் சிலநாட்களுக்குமுன் கேட்டனர். எனது பதில் என்னவென்றால் சரியான வரவு செலவு திட்டப்படி ருஷ்யா, லிபியா, முதலியவைகளுக்கு டாங்கிகளும், கோலோன், எஸ்ஸன், ஜெர்மன் தொழிற்சாலைகள், இவைகளைத் தாக்க விமானங்களும் கட்டப்படுகின்றன என்றேன். அதிகமாக வரி விகிதங்களைப்போட்டாலும் வேலைக்காரர்களும், முதலாளிகளும் வேலைசெய்ய முடியாது. மிஸ்ட்டர் பெவின் சமீபத்தில் சொன்னபடி யுத்த முயற்சி என்றால் பொதுமக்களைப் பொருக்காமல் எவ்வாறு இருக்குமென்றார் வரவு செலவு திட்டம் சரியாக இல்லாமல் இருந்தால் விலைவாசிகள் அதிகமாகி அதனாலும் ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்படும். ஆகவே நடுநிலையைக் குறிக்கக்கூடியபடி திட்டத்தைப்போட்டு பொருளாதார பிரச்னைகளை பல வழிகளில் தீர்த்துவந்தனர். இதன் சௌகரியத்தை, பொதுஜனங்கள் வெற்றியை முன்னிட்டு ஈடுபடுவதிலிருந்ததே தெரிந்து கொள்ளலாம்.

### கோலோன் தாக்குதலும் ஒரு பதில்.

சமீபத்தில் கோலோனை பிரிடிஷ் விமானங்கள் தாக்கியதிலிருந்தும் பிரிடிஷ் பொருளாதார திட்டம் சரியானதென்று தெரிந்துகொள்ளலாம். அதாவது

வேறுவிதமாக இருந்தால் தொழிலாளிகளும், முதலாளிகளும் மனப்பூர்வமாக ஈடுபட்டு கோலோன் தாக்குதலுக்கு லாயக்காக விமானங்களைச் செய்திருக்க முடியாது. மேலும் யுத்த சாமான்களை அதிகம் செய்வதென்றால் வேறு சில்லரை சாமான்களை அதிகம் உற்பத்தி செய்யமுடியாது. வேலை அதிகமாகச்செய்து அதனால் கூலி அதிகம் கிடைக்குமானால் அது வேலைக்காரர்களுக்கு விருப்பம்தான். டாங்கி முதலியவை இரட்டிப்பு மடங்கு செய்யப்பட்டால், துணிமணிகளும் இரட்டிப்பு மடங்கு செய்யப்படுமென்று நினைப்பது தவறாகும்.

இந்த விதமாகத்தான் யுத்தகாலத்தில் பொருளாதார பிரச்னை தீர்க்கப் படுகிறது. இதற்கு சாதகமாக மிச்சம் பிடிக்கும் இயக்கம் இருந்துவருகிறது. வேலைக்காரனுக்கு அதிகமாக பண வெகுமதி கொடுத்து அதன் ஒரு பங்கை யுத்தச் செலவிற்கு கொடுக்கச் செய்வது சாதகமான அம்சம். ஏனென்றால் வேறு சாமான்களின் ஸப்ளை அவ்வளவு அதிகம் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில் பணத்தை வைத்துக்கொண்டு செய்யப்போவது ஒன்றுமில்லை. பிரிடனில் இந்த ஏற்பாடு எவ்வாறு நடக்கிறதென்று பார்ப்போம்.

### கொஞ்சம் மிச்சம்பிடிப்பது,

இதுவரை யுத்தச்செலவு சுமார் 9,00,00,00,000 பவுன். இதில் ஐந்தில் இரண்டு பங்கு வரி விகிதங்களால் கிடைத்தது. 1,50,00,00,000 பவுன் அல்லது ஆறில் ஒரு பங்கு கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடிக்கப்பட்டதிலிருந்து கிடைத்தது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும், ஒவ்வொரு தெருவிலும் இம்மாதிரியான இயக்கம் இருக்கவேண்டும். நூற்றுக்கணக்கான பேர்கள் ஒவ்வொரு வாரத்திலும் மிச்சம் பிடிக்கும் ஸர்டிபிகேட்டுகளைக் கொடுத்தும், இதர விதமான கடன்களுக்காகவும் வசூல் செய்கின்றனர். எவ்வித சீதோஷ்ண நிலையிலும் இவர்கள் வசூல் செய்யச் சொல்லுவார்கள். எதிரி விமானத்தாக்குதல் நேர்ந்துகொண்டிருக்கும்போதே இவர்கள் போவார்கள். சில சமயங்களில் வேலைக்காரர்கள் வாரச் சம்பளங்களிலிருந்து இதற்குக் கொடுக்கின்றனர்.

மிச்சம் பிடிக்கும் இயக்கம் மிக மும்மரமாக நடந்துவருகிறது. இதனால் வேலைசெய்யத் தகுந்த மனப்பான்மை ஏற்படுவதோடு விலைவாசிகளும் அதிகம் ஏறாது. வருங்காலத்திலும் உசிதமானபடி செலவு செய்யவும் ஜனங்கள் தெரிந்து கொள்ளுகின்றனர்.

### அதிகமாக மிச்சம்பிடிப்பது.

அதிகமாக மிச்சம் பிடிக்கும் விஷயத்தை மறக்கக்கூடாது. கம்பெனிகள் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றன. கம்பெனிகள் மிச்சப் பணத்தைச் செலவு செய்யமுடியாதென்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் இது சாத்தியமில்லையென்றால் கொஞ்சம் மிச்சம் பிடிப்பதும் சாத்தியமில்லையென்று பிரிடிஷ் கவர்ன்மெண்டார் நினைக்கின்றனர். யுத்தம் ஆரம்பித்தது முதல் அதிக மிச்சம் பிடித்து 2,50,00,00,000 பவுன் கடன் கிடைத்திருக்கிறது.

இவைகளுடன் வட்டி விகிதங்களையும் சேர்த்ததால் ஐந்தில் நாலு பங்கு கிடைத்துவிட்டது. இதனால் யுத்த முயற்சிக்கு ஒரு குறையும் ஏற்படவில்லை. பாக்கியுள்ள ஐந்தில் ஒரு பங்கு கிடைக்காததால் அதிக பாதகமில்லை.

# யுத்தத்தில் இந்தியப் பகுதிகள்.

# முதலாவது பஞ்சாப் ரெஜிமெண்ட்.

## லிபியாவிலும், எரிட்டிரியாவிலும் நடந்த சண்டைகளில் ஈடுபட்டிருந்தது.

(ஸர் பாட்ரிக் கேடல், C. S. I., C. I. E., (I. C. S. Retd.) என்பவர் எழுதியது.)

ஆபிரிக்காவில் நடக்கும் போர் முனைகளில் ஈடுபட்ட இந்தியப் பட்டாளங்கள் நல்ல புகழுடன் போரிட்டு வருகின்றன. அவைகளில் முதலாவது பஞ்சாப் ரெஜிமெண்டும் சேர்க்கப்பட்டிருந்தது. அதற்கு கௌரவத் தலைவர் பிரிடிஷ் சேனாதிபதி ஒருவர்.

இப்பட்டாளம் எரிட்ரியாவிலும், ஸிரியாவிலும் போர் புரிந்ததில் தங்கள் போர் திறமையைக் காட்டிற்று. அதனால் புராதனமாக அதற்கிருந்த கியாதியும் அதிகரித்தது.

1940-ம் வருஷ லிபியன் எல்லைப்புறத்திலிருந்த கிரேஸியானியுடைய அதிக எண்ணிக்கையுள்ள படைகளை நமது போரணி கவலைக்கு இடங்கொடுக்கும் விதமாக அநேக மாதங்கள் வரை மிரட்டித் தடுத்துவந்தது. அந்த அணியில் இந்த ஒரு பகுதியும் சேர்ந்தது. தாக்குதலில் அவை முன்னாலிருந்தன. அப்படி டிஸம்பர் மாதம் 9-ம் தேதி நடந்த தாக்குதலில் எதிரியின் படையை விரட்டி நிம்பியு, ஸிடிபரானி முதலிய ஊர்களுக்குச் சென்று, அங்கு எதிரிகளைச் சிதரடித்து, சிறையிலகப்படும்படி செய்துவிட்டன.

பிறகு எரிட்டிரியன் எல்கைக்குச் சென்று அங்கு நடக்கும் போரில் கலந்து கொண்டது. எதிரித் துருப்புகளை கஸாலாவிலிருந்து கேரன் வரையிலும், பிரிடிஷ் துருப்புகள் துரத்தியடித்ததில் இப்பகுதியும் பங்கெடுத்துக் கொண்டது. இந்தப் பாய்ச்சலில் அகொர்டாட் (Agordat), பாரெண்டு (Barentu) என்ற இடங்களிலிருந்த பலமான இதாலிய ராணுவ ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

கேரனில், மலைப்பாங்கான பிரதேசத்தில் அவைகள் சண்டையிட்டன. இந்தியாவின் எல்லைப்புறங்களில் சண்டையிட்டு நல்ல பயிற்சி பெற்றிருந்ததினால் இம்மாதிரி சண்டைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள். "பிரிகேடியர் பீக்" என்று சொல்லப்படும் கேரன் பள்ளதாக்கு அருகாமையிலுள்ள அந்தத் தொடரின் உச்சஸ்தானத்தை அவர்கள் துப்பாக்கி முனைகள் கைபீரங்கிகள் இவைகளின் உதவியைக்கொண்டே இருமுறை கைபற்றினார்கள்.

### ஏழுவாரங்கள் ஒரே நிலையாக நின்றார்கள்.

உதவிப்படைகள் சரியான சமயத்தில் வர சாத்தியப்படாமல் போனதை முன்னிட்டு இருமுறை அவர்களுக்கு அதை விட்டுவிடும்படியான நிர்ப்பந்தம் நேரிட்டது. இருந்தாலும் ஆகாய விமானமூலம் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்யவேண்டியிருந்தபோதிலும் அந்தத் தொடரை விட்டு அவர்கள் அகலவில்லை. கடைசியில் 7 வாரங்கள் சண்டைசெய்த பிறகுதான் உதவிப்படைகள் வந்து சேர்ந்தன. அதன் பிறகு அந்த இடத்தை மிக்க பலமாக முற்றுகைபோட்டு கைப்பற்றிக்கொண்டனர்.

ஸரியாவில் இதைக்காட்டிலும் இன்னும் கடுமையான யுத்தம் நேர்ந்தது. இதாலியர்களைப் போல் விசேஷ பயிற்சி பெற்றவர்களும் அவர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கைகொண்ட விஷி பிரெஞ்சு படையை அவர்கள் சந்தித்தார்கள்.

# நீங்கள் ஏன் பணத்தை மீதப்படுத்தவேண்டும்?

பணக்கணக்குப் பார்த்தால், நவீன யுத்தங்களினால் மிகவும் செலவு நேரிட்டுக் கொண்டிருக்கிறது என்று யாவருக்கும் தெரியும். இந்த வருஷத்தில் யுத்தப் பிரயத்தனத்துக்கு இந்தியா 133 கோடி ரூபாய் செலவு செய்கிறது. ஆனாலும் யுனைடெட் ஸ்டேட்ஸும் கிரேட் பிரிட்டனும் செலவழித்த தொகைகள் இதைக் காட்டிலும் இன்னும் வெகு அதிகம்.

நவீன யுத்தங்கள் ஏன் இவ்வளவு செலவு உள்ளதாக இருக்கின்றன? அதற்கு பதில் யாவரும் எளிதில் சொல்லி விடலாம். முன்னணியிலிருக்கும் போர் வீரனுக்கு அதிகச் செலவு செய்து முஸ்தீப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. அவனுக்கு உதவியாக ஆகாய விமானங்களும், டாங்கிகளும், பலவகைப்பட்ட பீரங்கிகளும் அனுப்பவேண்டியிருக்கிறது. அவனுக்கு நல்ல உடையும், போர் திறமையுடன் இருப்பதற்கு நல்ல உணவும் கொடுக்கவேண்டியிருக்கிறது. மேலும் அல்லும், பகலும் நடக்கும் இந்த யுத்தத்தில் யுத்தப் பொருள்களின் விரயம் அதிகமாக இருக்கிறது. ஆதலால் அதற்குப் பதிலாக உடனுக்குடன் ஈடுசெய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டு வருகிறது. முன்னணியிலிருக்கும் வீரனுக்குப் பின்னால் அவனுக்கு ஸப்ளைப் பொருள்கள் கொடுப்பதற்கு ஏராளமாக யந்திர சாதனமும் வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னால் நவீன சைனியத்திற்குத் தேவையான ஆயிரக்கணக்கான யுத்த தளவாடங்களைத் தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் உற்பத்தி செய்கிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதுவும் பணமும் இப்பொழுதே கொடுக்கவேண்டியிருக்கிறது. போர்வீரனுக்குத் தயாரித்துக் கொடுக்கப்படும் உடைக்கு வேண்டிய பருத்தியை விளைவித்துக்கொடுக்கும் குடியானவனுக்கும், எஃகு துண்டை துப்பாக்கி குழாயாகச் செய்யும் தொழிலாளிக்கும், கப்பற் துறைகளுக்கு இந்தச் சாமான்களை ஏற்றிச்செல்லும் மோட்டார் டிரைவருக்கும், உயிரை லக்ஷியம் செய்யாமல் கப்பலில் வேலை பார்க்கும் மாலுமிக்கும், அவரவர்கள் வேலையைச் சந்தோஷமாகச் செய்து வருவதற்கும் உயிர் வாழ்வதற்கும் அவ்வப்போதே சம்பளம் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்களுக்குக் கடன் சொல்ல முடியாது. அவர்களுக்குத் தேவையான பணத்தை அதிகத் துரிதமாகத் தேடுவதற்கு என்னென்ன வழிகள் உண்டு?

யுத்தச் செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க நான்கே வழிகள்தான் உண்டு. (1) குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிப்பவர்களின் பேரில் வரி விதிப்பது.

(2) குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஜனங்கள் தங்கள் வருமானங்களில் ஒரு பாகத்தை அரசாங்கத்தாருக்குக் கடனாகக் கொடுப்பது.

(3) யுத்தச் செலவுக்குத் தேவையான பணத்தை அரசாங்கத்தார் காகித நாணயமூலம் அச்சிடுவது அதாவது காகித நாணயத்தை அதிகப்படுத்துவது.

(4) மற்றொரு தேசம் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஜனங்களுக்கு இனாமாகவோ, கடனாகவோ, அல்லது அதன் சொத்துக்களை கடனுக்கு வாங்கிக் கொண்டு தொகையைக் கொடுத்து உதவுவது. இந்தியாவில் நடக்கும் யுத்தச் செலவின் ஒரு பாகத்தை ஐக்கிய அரசாங்கம் செய்து வருகிறது. இன்னும் யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கத்துடன் செய்துகொண்ட குத்தகைக் கடன் மசோதாப்படி யுத்தப்பொருள்கள் அனுப்பிவருவது.

ராஜீயப் போக்கிலும், நிதி நிர்வாகத்தின் தன்மையிலும் நாலாவது வகைக்கு ஏற்பாடுகள் ஓரளவு மட்டில்தான் செய்யமுடியும். யுத்தச் செலவிற்கு ஒரு

பாகத்தை உள்நாட்டு நிர்வாக நிதியிலிருந்துதான் கொடுக்கவேண்டும். அப்பொழுது எந்த முறையை அனுசரித்தால் நலம் என்பது தோன்றும்.

மேலே மூன்றாவதாகச் சொல்லப்பட்ட முறை சரியல்லவென்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏன் அப்படி? ஒரு தனிப்பட்ட நபர் வரிவிதிக்கப்பட்டாலோ, அல்லது அவன் அரசாங்கத்தாருக்குக் கடன் கொடுத்துதவும் போதோ, ஏற்கனவே அவன் வாங்கிக் கொண்டிருந்த சாமான்களை அத் தொகையைக் கொண்டு இப்பொழுது வாங்க முடியாமல் போய்விடுகிறது. அரசாங்கத்தில் அப்பணத்தைக் கொடுத்தால் அதையோ அல்லது அதற்கு பதிலாக வேறு சாமன்களையோ அரசாங்கம் வாங்கி உபயோகிக்க ஹேதுகரமாயிருக்கிறது. ஆனால் தனிப்பட்ட நபர் பணம் மீதப்படுத்தாமலும், அல்லது வரி விதிக்கப்படாமலும் இருந்தால், அரசாங்கம் காகித நாணயத்தை அதிகப்படுத்த வேண்டிவரும். அதனால் என்ன பயன் சம்பவிக்கும்? அப்படியானால் அரசாங்கத்தாருக்குத் தேவையான பொருள்களை வாங்க மற்ற சாமான்கள் வாங்குபவர்களுடன் அரசாங்கம் போட்டிபோட வேண்டியிருக்கும். இதன் காரணமாக விலை அதிகப்படுகிறது. முடிவில் வரி வசூலிக்கப்படுவதிலும் அல்லது அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்பதிலும் தனிப்பட்ட நபர்களுக்கு எவ்விதம் பொருள்களையோ அல்லது மற்ற சாதகங்களையோ அடைய முடியாமல் போய்விடுகிறதோ, அதேமாதிரியாகவே இம்முறையில் பொதுமக்களுக்கு அனுகூலமில்லாமல் போய்விடுகிறது இவ்விதம் பார்ப்பதால் வித்தியாசம் அதிகமில்லாமல் தோன்றினாலும், உண்மையில் வேறு எல்லாவகையிலும் அதிக வித்தியாசங்கள் இருக்கின்றன. அதனால்தான் காகித நாணய மாற்று முறை யுத்த நிர்வாக நிதிக்கு உகந்ததில்லை என்று சொல்லப்படுகிறது.

முதலாவது நிருதியாக வருமானங்களைக்கொண்டோ அல்லது விலைவாசிகளின் மாறுதலுக்குத் தக்கவாறு வருமானத்தை உபயோகிக்க முடியாமல் இருக்கிறவர்களுக்கும், காகித நாணயமாற்று அநீதியாகவும், மறைமுகமாகவும் வரி விதிப்பது போலாகும். பொருள்கள் வாங்குவதற்கு. ஸர்க்காருக்கு ஏராளமான நிதியிருக்கிறது. பொருள்கள் வாங்குவதில் ஸர்க்கார் போட்டி போட்டால் விலை அதிகமாய்விடுகிறது. அப்படி விலைவாசிகள் அதிகமானால் நிருதியாக வருமானமுள்ளவர்கள், அதிக வரி விதிக்கப்பட்டவர்களுக்குப் பணத்தட்டு ஏற்படுவது போலவே, குறைவாகத்தான் தேவையான பொருள்கள் வாங்கக்கூடும். சரியான முறையில் வரி விதிப்பதில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குக் குறைவான வரி ஏற்படும். அதனால் காகித நாணயமாற்றில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு அபரிமிதமான வரி போட்டதாகும்.

இரண்டாவதாக யுத்த நிதிக்கு காகித நாணய மாற்றும் முறைகளை அனுசரித்தால் அவற்றை வரவர அதிகரிக்கச் செய்யவேண்டிவரும். முதலில் கொஞ்சம் ஏற்படுத்தினால் அதற்குப் பிறகு அதைக்காட்டிலும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அதற்குக் காரணம் சர்வ சாதரணமானதுதான். அரசாங்கத்தார் மற்றபடி பொருள்கள் வாங்குபவர்களுடன் போட்டி போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். விளைபொருள்களில் பாதியை அரசாங்கத்தார் விலைக்கு வாங்கிக்கொள்வதினால் மற்ற பாதி சாமான்களின் விலை இரண்டு மடங்காகிறது. ஒரு ரூபாய்க்கு விற்ற சாமான் இப்பொழுது இரண்டு ரூபாயாக இருக்கிறது. இன்னும் பாக்கியிருக்கும் பாதியை வாங்குவதாயிருந்தால் முந்தியைக் காட்டிலும் இன்னும் இரண்டு மடங்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டிவரும். இம்மாதிரியாகவே விலை மறுபடியும் இரட்டித்தால் முந்தின தொகையைக் காட்டிலும் 4 மடங்கு அதிகமான தொகை காகித நாணயங்களாக இருக்கவேண்டும். இம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் அரசாங்கத்தாருடன் ஜனங்கள் போட்டிபோட முடியாமல் போய்விடும். விலைவாசிகள் அதிகப்பட அதிகப்பட அரசாங்க நிதி நிர்வாக நிலைமையும் அதிகம் சீர்குலைந்துபோய்விடும். ஏனென்றால் இம்மாதிரி நீண்ட

காலம் அதிகச் செலவின்பேரில் யுத்தம் நடந்தால், ஏராளமாக காகித நாணயங்கள் ஏற்படவேண்டும். அதன் பயனாக காகித நாணயத்திற்கே விலை மதிப்பில்லாமல் போய்விடும்.

ஆகையால் இம்மாதிரி அபாய முறையை அனுஷ்டிக்காமல் யுத்தத்திற்கு வேண்டிய பணத்தை அரசாங்கத்தார் வரி விதிப்பதின் மூலமும், கடன வாங்குவதின்மூலமும்தான் தேடவேண்டும்.

இந்த இரண்டு முறைகளிலும் அரசாங்கத்துக்கும், தனிப்பட்ட நபருக்கும் போட்டியில்லை. ஒரு தனிப்பட்ட நபர் வரி விதிக்கப்பட்டாலோ, அல்லது அவன் அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்தாலோ அவன் தனக்காகச் செலவு செய்து கொள்வதை நிறுத்திக்கொள்ளுகிறான். யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான பொருள்களை, அரசாங்கத்தார் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமிருப்பதால், அவற்றை அவன் போட்டியில் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. ஆனால் யுத்தச் செலவு பூராவும் அதிக வரி விதிப்பதின்மூலம் ஏன் ஈடு செய்யக்கூடாது?

சிறிதுகாலம் யுத்தம் நடந்தாலும் அல்லது அதிகச் செலவு நேரிடாமலிருந்தாலும், அச்செலவை வரி வசூலிப்பதின்மூலம் ஈடு செய்யமுடியும். ஆனால் இப்பொழுது நீண்டகாலம் அதிகச் செலவின்பேரில் நடக்கும் இந்த யுத்தத்தில் வரையறும்பில்லாமல் வரியை அதிகரிக்கமுடியாது. அப்படி வரியை அதிகப்படுத்தினால், நூதனமாகத் தொழில் செய்வதோ அல்லது சிக்கன முறையில் தொழில் நடத்துவதோ தடைப்பட்டுவிடும். மேலும் பொதுமக்களின் சக்தியை ஒத்தே வரி போடவேண்டும். ஒரே வகுப்பிலுள்ளவர்களுக்குப் போடப்படும் வரியில் அதிக வித்தியாசம் இருக்கக்கூடாது. அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி வரி விதிக்கவேண்டும். சிக்கன முறையிலும், பரித்யாகம் செய்து சேகரித்து வைத்திருக்கும் பொதுமக்களின் பொருளை கடன் வாங்குவதினால் யுத்த நிர்வாகத்திற்கு வேண்டிய பணத்தை சேகரிக்கமுடியும். எவ்வகையிலும் சாமர்த்தியமுள்ள பொதுமக்கள் வருங்காலத்தில் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் வேண்டிய பொருளை சேமித்துவைத்தும், தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்ய விரும்புகிறார்கள். இம்மாதிரி சேமித்துவைத்திருக்கும் பொருள்களைப் பொதுமக்கள் அரசாங்கத்தாருக்கு கடன் கொடுப்பதின் மூலம், யுத்த நிர்வாகத்திற்குத் தேவையான பணத்தை செலவு செய்யக்கூடும். ஆகையால் பொதுமக்கள் பெரும் பொருள்களை மீதப்படுத்துவதால் வருங்காலத்தில் தங்களுடைய நிலைமையை பாதுகாக்கவும், யுத்தப்பிரயத்தனத்தில் உபயோகிக்கவும் ஆக இருவகை சாதனங்கள் உண்டு

இதுமாத்திரம் அல்ல. யுத்தகாலத்தில் அதிகம் செலவு செய்யாமல் ஒருவன் இருந்தால் அப்பணத்தைக்கொண்டு வேறு வழியில் செலவு செய்து கொள்ளலாம். முந்திச் சொன்னபடி நவீன யுத்தங்களுக்கு அரசாங்கத்தாருக்கு எல்லாவித பொருள்களிலும் ஏராளமான ஸப்ளை தேவையாயிருக்கிறது. ஆனால் எல்லாவித ஸப்ளைப் பொருள்கள் மிகவும் குறைவாகயிருக்கிறது. இப்பொழுது ஒருவன் தன் பணத்தைச் செலவு செய்தவிட்டால், பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால் அதனால் பின்னால் கிடைப்பதைக்காட்டிலும் குறைவான சாமான்களையே அவன் பெறுகிறான். மேலும் அவன் செலவு செய்வதில் அரசாங்கத்தாருக்கும் அதிகம் செலவாகிறது. தானும் பொருள்களைச் சேகரிப்பதில் செலவு அதிகம் செய்யவேண்டியிருக்கிறது. மேலும் விலை உயரும்பொழுது சாமான் வாங்குவது வர்த்தகத் தொழிலுக்குத் உகந்தது அல்ல. இத்துடன் இப்பொழுது செலவு செய்யாமல் அதே பணத்தை வைத்துக்கொண்டு வருங்காலத்தில் வாங்கினால் அதிகமாக சாமான்கள் வாங்கலாம்.

ஏற்கனவே சொன்ன காரணங்களை வினு மீதப்படுத்துவதற்கு விசேஷ காரணம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது காலக்ஷேபத்திற்கு வேண்டிய செலவு அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் அதுபோல் சம்பாத்தியமும் அதிக

மாயிருக்கிறது. யுத்தத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் அநேக ஜனங்கள் நல்ல நிலைமையிலிருக்கிறார்கள். ஆனால் யுத்தம் முடிந்த பிறகு யுத்த நிமித்தமாக நடக்கும் வேலை மும்மரமும், அதற்காக வேலைக்கு அமர்த்தப்படுவதும் குறையக் கூடும். எந்நிலைமையிலும் யுத்தம் முடிந்து சமாதான நிலைமை ஏற்படும் வரையில் வேலையும் சம்பாத்தியமும் குறைந்துவிடும். இப்பொழுது மீதப்படுத்தி வைத்துக்கொண்டால்தான், வரப்போகும் வருமை காலத்திற்கு ஈடுசெய்து கொள்ள முடியும். இப்பொழுது விலை அதிகமாக இருக்கும்பொழுது செலவு செய்வது எப்படி சிக்கனமில்லாததோ அதுபோலவே வருங்காலத்தில் விலை குறைவாக இருக்கும்பொழுது செலவு செய்வது மிகவும் சிக்கனமாக இருக்கும். யுத்த நிலைமை மாறி சமாதானம் ஏற்படும் வரை அக்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்படக்கூடிய கஷ்டத்தைத் தடுக்க இப்பொழுது மீதப் படுத்தி வைத்து அப்பொழுது செலவு செய்வதுதான் யாவரும் விரும்பத்தக்கது.

---

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

## பிரஸங்கம் 101—(3-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜுன் | ...27, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 28, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | „ | 6.00 |
| | | | கோட்டைக்காடு | .. | „ | 6.30 |
| | 29, | திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... | „ | 6.00 |
| | | | கீழக்குரிச்சி | .. | „ | 6.30 |
| | 30, | செவ்வாய்க்கிழமை | ராமச்சந்திரபுரம் | .. | „ | 6.00 |
| | | | ராயவரம் | ... | „ | 6.30 |
| ஜுலை | ... 1, | புதன்கிழமை | மழையூர் | ... | „ | 6.00 |
| | | | கரம்பக்குடி | ... | „ | 6.30 |
| | 2, | வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... | „ | 6.00 |
| | | | எம்பல் | ... | „ | 6.30 |
| | 3, | வெள்ளிக்கிழமை .. | குழிபிரை | ... | „ | 6.00 |
| | | | செவலூர் | ... | „ | 6.30 |

## பிரஸங்கம் 102—(4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4, | சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.30 |
| 5, | ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | .. | „ | 6.00 |
| | | ஆவூர் | ... | „ | 6.30 |
| 6, | திங்கட்கிழமை ... | காரையூர் | ... | „ | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | „ | 6.30 |
| 7, | செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | „ | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | „ | 6.30 |
| 8, | புதன்கிழமை ... | கீரனூர் | ... | „ | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | „ | 6.30 |
| 9, | வியாழக்கிழமை ... | வடவாளம் | ... | „ | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | „ | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—30-6-42.